# செந்தூவல்

எந்த மதக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு சாதிமுறை அமைந்துள்ளதோ அதை அழித்தொழிக்காமல் சாதியை ஒழிப்பது இயலாது.



- அம்பேத்கர்

தி. பி 2050 சுறவம் | தனிச்சுற்றுக்கு மட்டும் | நன்கொடை உரூ. 10/= | இதழ்: 3


**உள்ளே...**


சபரிமலைக்குப் பெண்கள் செல்வதைத் தடுப்பது வரலாற்று அறிவின்மையின் வெளிப்பாடு 2

ஆயுஷ்மான் திட்டம் யாருக்காக 3

அந்தரங்க உரிமைகளுக்கு ஆப்பு வைக்கும் `ஆதார்' 4

காப்பியடிக்கப்பட்ட அரசியல் சட்டம் 5

செய்திக் கதம்பம் 6

இந்திய அரசியலமைப்பின் இந்து மதச் சார்பு 7

கஜா புயல் நிவாரணப் பணிகள் - புஇமு, தமிழ்நாடு & பிரான்ஸ் மஞ்சள் அங்கிப் போராட்டம் 8


**அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் நல் வாழ்த்துகள்!**

# உயர் சாதியினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடுச் சட்டம் - சமூகநீதிக்கு வைக்கப்படும் வேட்டு!

கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு இல்லாத பிரிவினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை பார்ப்பனிய பாசிச பாஜக அரசு நாடாளுமன்றத்தில் (திமுக தவிர்த்து) எதிர்க்கட்சிகளின் நேரடி மற்றும் மறைமுக ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளது.

புரியும்படி சொன்னால், தமிழக மக்கள் தொகையில் 3 சதவீதமே உள்ள பார்ப்பனர்களுக்கு 10 % இட ஒதுக்கீடு, வடமாநிலங்களில் அதிகம் போனால் 10 அல்லது 12% அளவே உள்ள பார்ப்பன, சத்திரிய, வைசிய உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு.

அதிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள், அதாவது ஏழைகள் என்று வரையறுக்க வைக்கப்பட்டுள்ள அளவுகோல் ஆண்டு வருமானம் 8 லட்சத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது மாதம் ரூபாய் 66000 சம்பளம் வாங்குபவர்கள் எல்லாம் `உயர்ஜாதி' ஏழைகள். அப்படி என்றால் திட்டக் கமிஷன் மாதம் ரூ.950-க்கு கீழ் வருமானம் உள்ளவர்களை வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களாக வரையறுத்ததே! இது `கீழ்ஜாதி' ஏழைகளுக்கு போலும் - இதுதான் மனுநீதி!

ஏற்கனவே நாட்டில் 80 சதவீதத்துக்கு மேல் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு 50 சதவீதத்துக்கு மேல் இட ஒதுக்கீடு இல்லை. (விதிவிலக்காக தமிழகத்தில் இது 69%) மீதி 50 % இடங்கள்பொதுப்பிரிவினருக்கு என்று இருந்தாலும் நடைமுறையில் பார்ப்பனர்களே அதை ஆக்கிரமித்துள்ளனர். (பார்க்க: பெட்டிச் செய்தி) அதுவும் சட்டத்துறை, நீதித்துறை, நிதித்துறை, ராணுவத் துறை ,நிர்வாகத்துறை என எல்லா உயர் அதிகார மட்டங்கள் முழுவதும் ஏறத்தாழ 90% பார்ப்பனர்களே ஆக்கிரமித்துள்ளனர். பிறகெதற்கு அவாளுக்கு 10 % இடஒதுக்கீடு?

வடமாநில உயர்சாதியினரின் ஓட்டுக்களை அறுவடை செய்யவே பாஜக இந்த சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது என்பதும் அதே காரணத்துக்காக காங்கிரசு, சமாஜ்வாடி, பகுஜன்சமாஜ், சிபிஎம் போன்ற கட்சிகள் இந்த சட்டத்தை ஆதரிக்கின்றன என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மை. ஆனால், அதையும் தாண்டி ஆர்எஸ்எஸ் -பாஜக கும்பலின் நோக்கம் பார்ப்பனிய சுரண்டலுக்கும், அதிகாரத்திற்கும் எதிரான போராட்டத்தில் உருவான சமூக நீதி கொள்கையான இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு சவக்குழி தோண்டுவதாகும்.

சமூக நீதி கொள்கை என்பது சமூக சமத்துவத்திற்கான கொள்கையாகும். ஈராயிரம் ஆண்டுகளாக இந்திய சமூக அமைப்பு பார்ப்பனர்களை தலைமை ஆதிக்கத்தில் வைத்து அதன் கீழ் மக்களை பலபடித்தான சாதிகளாகப் பிரித்து வைத்துள்ள - அதுவும் ஒரு சாதியின் கீழ் ஒரு சாதி என பிரித்து - கீழ்நோக்கிய வகையில் அதிகாரத்தையும், சுரண்டலையும், ஒடுக்குமுறையையும் செலுத்துகின்ற கொடூரமான சாதிய சமூக அமைப்பு. உடல் உழைப்பில் ஈடுபடாத ஒட்டுண்ணிகளான பார்ப்பன, சத்திரிய, வைசிய வர்ணங்கள் சார்ந்த சாதியினருக்கு இந்த சாதிய சமூக அமைப்பு சேவை செய்கிறது; உழைக்கும் மக்களாகிய சூத்திர சாதியினரையும், பஞ்சமர்களையும், பழங்குடியின மக்களையும், பெண்களையும் இழிவுபடுத்துகிறது - ஒடுக்குகிறது - சுரண்டுகிறது. இவர்களது கல்வி உரிமை, சொத்து சேர்க்கும் உரிமை, விரும்பும் தொழில் செய்யும் உரிமை அனைத்தையும் ஈராயிரம் ஆண்டுகளாகப் பறித்து வந்த இந்த சாதிய கட்டமைப்பு வெள்ளையர்களின் வருகைக்கு பின்னர்தான் முதலாளிய உற்பத்திமுறையின் தாக்கத்தால் சற்று தளர்வுக்கு உள்ளானது.

பார்ப்பனியத்துக்கு எதிரான சமூக சமத்துவத்திற்கான போராட்ட வரலாற்றில் தமிழகத்தில் 1920களில் நீதிக்கட்சி ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட இடஒதுக்கீட்டு உரிமை ஒரு முக்கிய நகர்வு. அதன் தொடர்ச்சியாக பார்ப்பனிய - தரகு முதலாளிகளின் கையில் டெல்லி அதிகாரம் மாற்றப்பட்டபின் தந்தை பெரியாரின் போராட்டத்தால் கல்வி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய பிரிவினருக்கு இடஒதுக்கீட்டு உரிமை அரசியல் சட்டத்தில் அங்கீகாரம் பெற்றது. அப்போதும் அதன் பிறகும் பொருளாதார அளவுகோலைச் சேர்த்து இட ஒதுக்கீட்டுக்கொள்கையை நீர்த்துப்போகச் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் சாதியைக் காரணம் காட்டி மறுக்கப்பட்ட உரிமைகளை அதே சாதியின் பெயரால் பெறுவதுதான் இடஒதுக்கீட்டுக் கொள்கை. இந்த இட ஒதுக்கீடு உரிமையே இன்னும் முழுமையாக நிறைவேறாத நிலையே இன்றும் உள்ளது. காரணம் டெல்லி ஏகாதிபத்தியத்தில் உள்ள உயர்மட்ட அதிகாரம் அனைத்தும் பார்ப்பனர்களால் நிரம்பியுள்ளது.

சாதிவாரியாக விகிதாச்சார அடிப்படையில் இடஒதுக்கீடு கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வரும் இன்றைய நிலையில் ஏற்கனவே உள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு ஆப்பு வைக்க கிளம்பியுள்ளது மோடி அரசு.

சமூகரீதியாக காலம் காலமாக உரிமை மறுக்கப்பட்ட சாதிகளிலிருந்து கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் உரிமை தரும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை, பொருளாதார ரீதியாக பின்தங்கியோருக்கு என மாற்றுவது இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் சிதைப்பதாகும். பொருளாதார ரீதியாக தரப்பட வேண்டிய சலுகைகள் என்பது வேறு, சமூக ரீதியாக பின்தங்கியவர்களுக்கு தரப்பட வேண்டிய உரிமைகள் என்பது வேறு. தகுதி, திறமை என்று கூறிக்கொண்டு இடஒதுக்கீட்டு உரிமையை மறுத்து நஞ்சை கக்கி வந்த பார்ப்பனிய சக்திகள், `நீட்' டுக்கு அடுத்தபடியாக இன்று பொருளாதாரத்தைக் காட்டி சமூக ரீதியான இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் சிதைக்கப் பார்க்கின்றன. பார்ப்பன பாஜக - மோடி அரசின் இந்த சூழ்ச்சியை தமிழகமே திரண்டு முறியடிக்க வேண்டும். ●

---

குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் மொத்த இருக்கைகள் 49. இதில் பார்ப்பனர்கள் 39. துணைக் குடியரசுத் தலைவர் அலுவலகத்திலும் உயர் இருக்கைப் பதவிகள் 7இல் ஏழு பேரும் பார்ப்பனர்களே! கேபினட் செயலாளர்கள் என்னும் அதிக அதிகாரம் படைத்த பதவிகள் 20இல் பார்ப்பனர்கள் 17 பேர். பிரதமரின் அலுவலகத்திலோ 35 உயர் பதவிகளில் பார்ப்பனர்கள் 31, விவசாயத் திணைக் களத்தில் மொத்த இருக்கைகள் 274இல் பார்ப்பனர்கள் 259, பாதுகாப்பு அமைச்சகத்தில் 1379 பதவிகளில் 1300 பதவிகள் பார்ப்பனர்கள் வயிற்றில் தான் அறுத்துக் கட்டப்படுகின்றன.

நிதி அமைச்சகத்தில் 1008 இருக்கைகளில் பார்ப்பனர்கள் 942, தொழில் அமைச்சகத்தில் உள்ள 74 உயர் பதவிகளில் பார்ப்பனர்கள் 59. கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோலிய அமைச்சகத்தின் மொத்த பதவிகள் 121இல் பார்ப்பனர்கள் 91, உச்சநீதிமன்ற நீதிபதிகள் 26இல் பார்ப்பனர்கள் 23; மொத்த அய்.ஏ.எஸ். பதவிகள் 3600 இல் பார்ப்பனர்கள் 2750.

இந்த விவரங்கள் டெல்லியினைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் `யங் இந்தியா' எனப்படும் நிறுவனத்தால் தகவல் அறியும் உரிமைச் (RTI) சட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் பெறப்பட்டவையாகும்.

**நன்றி : விடுதலை**

---

## கடனாளி மோடி அரசு

ஏர் இந்தியா நிறுவனத்திற்கு இந்திய அரசிடமிருந்து வரவேண்டிய பாக்கித் தொகை 325 கோடி ரூபாயாக இருந்தது தற்போது ஆயிரத்து 146 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதற்கு பிரதமர் மோடி உள்ளிட்ட மத்திய அமைச்சர்களின் வரைமுறையில்லாத விமானப் பயணங்களே காரணம் என்பதும் அம்பலமாகியுள்ளது. குறிப்பாக இதில் மோடியின் பயணச்செலவுதான் மிக அதிகமாகும்.

ஏர் இந்தியா வழங்கியுள்ள தகவல்களின்படி, பாதுகாப்பு அமைச்சகம் மட்டும் 211 கோடியே 17 லட்சம் ரூபாய் அளவிற்கு பாக்கி வைத்துள்ளது. மத்திய அமைச்சரவைச் செயலகமும், பிரதமர் அலுவலகமும் வைத்துள்ள பாக்கி அதிகபட்சமாக 543 கோடியே 18 லட்சம் ரூபாயாக உள்ளது. வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் பாக்கி 392 கோடியே 33 லட்சம் ஆகும்.

இவ்வளவு பெரிய தொகையை ஏர் இந்தியா நிறுவனத்திற்கு வழங்காமல் தற்போது வரை ஏமாற்றிக்கொண்டிருக்கும் மோடி தான் வெளிநாட்டு வங்கிகளில் உள்ள `கருப்புப் பணத்தை மீட்டு' ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் செலுத்துவதாக சொல்லி ஓட்டுப் பொறுக்கினார் என்பது நினைவுக்கூறத்தக்கது.

---

**சிறுதொழில் நிறுவனங்களின் வயிற்றிலடிக்கும் குசராத் அரசு**

குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் ல்ரான் ஆப் கட்ச் என்பது உவர்நிலப் பகுதியாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது. 100 கி.மீ.க்கும் மேலாக விரிந்து பரந்து கிடக்கும் இந்த பகுதியிலும் இதனையொட்டிய `கோரி கீரிக்' பகுதியிலும் இயற்கையாகவே உப்பு படிமங்கள் உள்ளன. இதனை வெட்டி எடுத்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றன 20 க்கும் மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள். இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் 6 லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இத்தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும் அறிவிப்பு ஒன்றை செய்துள்ளது பாசக தலைமையிலான குசராத் அரசு.

இயற்கை உப்புப் படிமங்களையும், அதனில் இருந்து புரோமைனையும் பிரித்தெடுத்து ஏற்றுமதி செய்வதற்கு குசோலாரிஸ் கெம்டெக் என்ற கார்ப்பரேட் நிறுவனத்தை அனுமதித்து உள்ளதுதான் அது.சிறுதொழில்களை கொஞ்சம் கொஞ்சமாக ஒழித்துவிட்டு அனைத்தையும் கார்பரேட் மயமாக்குவது தான் மோடி அரசின் கொள்கை. ஆனால், `இந்தியாவிலேயே உற்பத்தி செய்வோம்' (மேக் இன் இண்டியா)', `வேலைவாய்ப்பை பெருக்குவோம்' என்று பொய்யான அறிவிப்புகளையும், விளம்பரங்களையும் செய்து தங்களை `சுதேசி'யாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்

# சபரிமலைக்குப் பெண்கள் செல்வதைத் தடுப்பது வரலாற்று அறிவின்மையின் வெளிப்பாடு

## - பேராசிரியர் க.நெடுஞ்செழியன் பேட்டி!

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் வாழ்வைச் செம்மைப்படுத்திய சமயம் ஆசீவகம் என்று சொல்லும் பேராசிரியர் க.நெடுஞ்செழியன், ஆசீவகத்தின் தொல் எச்சங்களையும், இலக்கியச் சான்றுகளையும் தன் தமிழறிவின் துணையுடன் நுட்பமாக ஆராய்ந்தவர். ஆசீவகமும் அய்யனார் வரலாறும்ம் என்ற வரலாற்று ஆய்வு நூலை எழுதியவர். தமிழகம் முழுக்க காணப்படுகிற அய்யனார், ஆசீவகத்தின் அடையாளமே என்று சொல்லும் அவர், சபரிமலை



அய்யப்பனும் கூட அய்யனார்தான் என்று நிறுவியவர். சபரிமலை பரபரப்பு ஓய்ந்துள்ள நேரத்தில், கொஞ்சம் நிதானமாக அவருடன் உரையாடியதில் இருந்து...

*முதலில் ஆசீவகம் பற்றி ஒரு அறிமுகத்தோடு தொடங்குவோமே?*

ஆசீவகம் என்பது தமிழர்களின் ஆதிச்சமயம். புராணக் கதைகளைக் கொண்டு கட்டமைக்கப்படாத, அறிவார்ந்த வாழ்க்கை முறை அது. இந்திய சமயங்களின் வரலாற்றில் சரணாகதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட முதல் சமயமாகவே ஆசீவகத்தை நாம் கருதலாம். அதற்கு அடுத்து தோன்றிய பௌத்தம், இதே சரணாகதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுதான், புத்தம், சரணம் கச்சாமி... சங்கம், சரணம் கச்சாமி... தர்மம் சரணம் கச்சாமி... என்று முழங்கியது. அதாவது, புத்தனிடம் சரணடைந்தேன், பௌத்த சங்கங்களிடம் சரணடைந்தேன், புத்த தருமத்திடம் சரணமடைந்தேன் என்று அந்த சரணாகதி கோட்பாட்டை அடுத்த எல்லைக்குக் கொண்டுபோனது பௌத்தம். பிற்காலத்தில் சைவம், வைணவம் எல்லாம் இந்த சரணாகதிக் கோட்பாட்டை வலியுறுத்துவதற்கு மூல ஆதாரமாக இருந்தது ஆசீவகக் கோட்பாடுதான். சாமியே சரணம் அய்யப்பா என்ற முழக்கம் கூட அந்த அடிப்படையில் உருவானதுதான்.

*அய்யனார்தான் அய்யப்பன் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?*

ஆசீவகத்தை உருவாக்கியவர் மற்கலிகோசாரர். இவரது மற்றொரு பெயர் அறப்பெயர் சாத்தன். சாஸ்தா என்பது, சாத்தன் என்ற தமிழ்ச் சொல்லின் சமஸ்கிருத வடிவம்தான். வேட்டியை சமஸ்கிருதம் கலந்து வேஷ்டி என்று சொல்வது போல, சாத்தனை சாஸ்தா என்று சொல்கிறோம். ஆசீவகத்தை உருவாக்கிய அறப்பெயர் சாத்தன்தான் இன்று தர்ம சாஸ்தாவாக அழைக்கப்படுகிறார். அவரே கேரளாவில் அய்யப்பன் என்று அழைக்கப்படுகிறார். அய்யனார் கோயிலுக்கு முன்பாக ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிடமாட்டார்கள். அது சுத்த பூஜையை (கொல்லாமை விரதத்ததை) அடிப்படையாக் கொண்டது. அதுதான் சபரிமலையிலும் கடைபிடிக்கப்படுகிறது.

*ஆசீவக வழிபாட்டின் கூறுகளில் ஏதாவது ஒன்று இப்போதும் அய்யனார் வழிபாட்டில் அப்படியே தொடர்கிறது என்று சொல்ல முடியுமா?*

18 படிகள் என்பதே பழைய வழிபாட்டு முறையின் தொடர்ச்சி தான். 18 படிகள் என்பவை ஒரு துறவியின் வளர்ச்சியில் ஏற்படக்கூடிய 18 வகையான குற்றங்கள். அந்த 18 குற்றங்களையும் கடந்தவர்கள் அய்யனாராக உயர முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். பசி, நீர்வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய் வாய்ப்படுதல், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு ஆகிய பதினெட்டுமே அவர்கள் குறிப்பிடுகிற குற்றங்கள் என்கிறது அய்யனார் பிள்ளைத்தமிழ் பாடல். தென்மாவட்டங்களில் முளைப்பாரி விழா நடைபெறுகிறதே, அதுகூட அய்யனார் வழிபாட்டின் தொடர்ச்சிதான். ஒவ்வொரு அய்யனார் கோயிலிலும் மூன்று வகையான வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டன. அய்யனார் வழிபாடு என்பது அறிவு வழிபாடு. அந்தக் கோயிலில் உள்ள ஏழு கன்னியர் வழிபாடு என்பது வளமை வழிபாடு, அங்குள்ள கருப்புகளுக்கான கிடாவெட்டு என்பது வீரவழிபாடு. இந்த மூன்று வழிபாட்டு முறைகளின் சங்கமம்தான் அய்யனார்கோயில்.

*ஆசீவகத்தில் வருகிற கருப்பு ஆடைக்கும், அய்யப்ப பக்கதர்கள் உடுத்துகிற கருப்பு உடைக்கும் உள்ள தொடர்பு என்ன?*

ஆசீவக மரபில் பின்பற்றப்பட்டும் கோட்பாடுகளில் ஒன்றான பிறப்புக்கோட்பாட்டை 6 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். கருப்பு, கருநீலம், பசுமை, செம்மை, பொன் நிறம், வெண்மை (கழிவெண் -பரம சுக்ல) நிறம். கல்லூரிகளில் ஒவ்வொரு இளங்கலைப் பட்டமும் 3 ஆண்டுகள் படிக்க வேண்டியதிருப்பதைப் போல, இந்த ஆறு வண்ணங்களும் தலா மும்மூன்று படிநிலைகளைக் கொண்டுள்ளன. ஆக மொத்தம் 18 படிகள். பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு நிறத்தில் சீருடை இருப்பதுபோல, மும்மூன்று படிகளுக்கு ஒரு நிறம் என்று பிரிக்கப்பட்டிருந்தது. ஆசீவக நம்பிக்கையின்படி, இந்த 18 படிகளையும் கடந்து வீடுபேறடைந்தவர்கள் மூவர் மட்டுமே. ஒருவர் அறப்பெயர் சாத்தன், இன்னொருவர் பூரணர், மூன்றாவது சின்னய்யனார்.

அறப்பெயர் சாத்தன் (மற்கலி) தான் மகாவீரருடன் ஆறு ஆண்டுகள் ஒன்றாகத் தவம் இயற்றி, துறவு நெறி நின்றவர். பின்னர் அவரைவிட்டுப் பிரிந்து தனிச்சமயம் கண்டார். எனவேதான் மகாவீரர் உள்ளிட்ட ஜைனர்கள் மற்கலியை தூற்றவும், இகழவும் செய்தார்கள். தர்ம சாஸ்தாவுக்குத் திருமணமாகவில்லை. பூரணர் திருமணமானவர். அவருக்கு பூரணம், பொற்கலை என்று இரண்டு மனைவியர் உண்டு. மூன்றாவது அய்யனார் பாண்டிய மன்னன் பூதப்பாண்டியனின் படைத்தளபதியாக இருந்தவர். ஒரு போரில் பூதப்பாண்டியன் இறந்துவிட, அவனது மனைவியும் தீப்பாய்ந்துவிடுகிறாள். அவர்களுடைய குழந்தைகளை எதிரிகளிடம் இருந்து காப்பாற்றி, தலைமறைவாக இருந்து மீண்டும் பாண்டியப் பேரரசு நிலைபெறக் காரணமாக இருந்தவர் இந்த அய்யனார் தான். மூன்று அய்யனார்களில் இவர் இளையவர் என்பதால்தான் அவரை சின்ன அய்யனார் என்கிறார்கள். சின்னய்யன், வீரய்யன், சின்னச்சாமி என்பதெல்லாம் அவரைக் குறிக்கும் பெயர்கள்தான். இவரும் திருமணமானவரே.

சபரிமலை அய்யப்பன் கோயிலில் ஆரம்ப காலத்தில் மூன்று அய்யனார்களுக்கும் கோயில் இருந்திருக்கலாம். இதுபற்றி இன்னும் விரிவான ஆய்வு தேவை. அய்யப்பன் கோயிலுக்கு கருப்பாடை அணிவது, பழனி முருகன் கோயிலுக்கு பச்சை ஆடை அணிந்து செல்வது, நீல நிற ஆடை அணிந்து செல்வது எல்லாம் இதன் எச்ச சொச்சங்கள்தான். பழனி கோயில் உள்பட தமிழ்நாட்டில் உள்ள பல கோயில்கள் அய்யனார் கோயிலாக இருந்து பிற்காலத்தில் சிவன், பெருமாள், முருகன் கோயிலாக மாறியவைதான். அய்யப்பனுக்கும், முருகனுக்கும் ஒரு தொடர்பு இருப்பதை இப்போதும் பார்க்க முடியும். அய்யப்பன் கோயிலுக்குப் போகிற பக்தர்கள் முருகன் கோயிலுக்கும் வந்து செல்வார்கள்.

*ஆசீவகத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் இருந்ததா?*

ஆசீவகத்தில் பெண்களும் துறவிகளாக இருந்தார்கள். ஜைன மதத்தில் பெண்களுக்கு வீடுபேறு கிடையாது. அடுத்தடுத்த பிறவிகளில் அவர்கள் ஆணாகப் பிறக்கும் வாய்ப்பு ஏற்பட்ட பிறகுதான் வீடுபேறு அடைய முடியும். ஒரு பெண், பெண்ணாகவே நேரடியாக வீடு பேறு அடைய முடியாது. ஆனால் ஆசீவகத்தில் அப்படியல்ல. கழிவெண் பிறப்பை அடைந்து வீடுபேறடைவர் என்பது ஆணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் பொது. சிலப்பதிகாரத்தில் வருகிற கவுந்தியடிகள் கூட ஆசீவகப் பெண் துறவிதான். கரூர் பக்கத்தில் உள்ள புகழூரில் (காகித ஆலை உள்ள ஊர்) உள்ள சமணப்படுகைகளில், ஆண்களைப் போலவே பெண் துறவிகளுக்கும் தனியாக கற்படுக்கைகள் இருந்திருக்கின்றன.

*ஆனால், பெண்கள் அய்யப்பன் கோயிலுக்குச் செல்வதை பந்தளத்து மன்னர் எதிர்க்கிறாரே?*

இன்று பல தமிழ்க் குடும்பங்களுக்கு அய்யனார் குல தெய்வமாக இருப்பதைப் போல, அந்த அரச குடும்பத்துக்கும் அய்யனார் குல தெய்வமாக இருந்திருக்கலாம். அதற்காக அய்யனார் அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவர் என்று கருதிவிட முடியாது. பந்தள அரச குடும்பம் உருவாவதற்கு முன்பே, அதாவது கி.மு.6-ம் நூற்றாண்டிலேயே உருவான துறவிகள் தான் இப்போது அய்யனாராக, அய்யப்பனாக வணங்கப்படுகிறார்கள். இரண்டாயிரம் ஆண்டாக சபரிமலை கோயில் பந்தள மன்னர்களின் மரபு வழியாகத் தொடர்ந்திருக்கும் என்று சொல்வதற்கு இடமில்லை. இன்றைக்கு அவர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதற்காகவே அந்தக் கோயில் அவர்களுக்கு உரியது என்றும் சொல்லிவிட முடியாது.

ராஜராஜ சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலுக்கு இன்றைக்குத் தமிழகத்தோடு தொடர்பே இல்லாத மராட்டிய மன்னர்கள் வழிவந்தவர்கள் தக்காராக இருப்பதுபோல, அவர்களும் இருந்திருக்கலாம். மற்றபடி பந்தள அரச குடும்பத்துக்கும் அய்யனார் வரலாற்றுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. அய்யனார் தமிழ்நாட்டில் இருந்து சென்றவர். எனவே, தான் 1950களில் சபரிமலையில் மீண்டும் அய்யனார் சிலையை நிறுவ வேண்டிய வந்தபோது பந்தள மன்னர் குடும்பத்தினர் தமிழரான பி.டி.ராசனை அணுகினார்கள். சபரிமலை அய்யப்பன் கோயிலில் குழந்தைகளுக்கு முதன் முதலாக சோறூட்டும் நிகழ்ச்சி 1990 வரையில் நடைபெற்றுள்ளது. அந்த நிகழ்ச்சிக்கு குழந்தையோடு, தாயும் செல்வது வழக்கம். இப்போது மட்டும் எங்கிருந்து வந்தது தடை? அய்யனார்களில் ஒருவரான பூரணரே இரு மனைவிகளுடன்தானே இருக்கிறார்?

*சபரிமலை கோயிலுக்கு பெண்களை அனுமதிப்பது குறித்து உங்கள் கருத்து?*

ஏற்கெனவே நான் சொன்னபடி, மூன்று வழிபாட்டு முறைகளை



உள்ளடக்கியது தான் அய்யனார் வழிபாடு. அறிவு வழிபாடு, வளமை வழிபாடு, வீர வழிபாடு. இந்த மூன்று வழிபாட்டிலும் தமிழ்நாட்டில் எந்த வழிபாட்டிலும் பெண்கள் பங்கேற்கத் தடையில்லை. தமிழ்நாட்டில் இப்போதும் சிறப்பாக நடைபெறுகிற முளைப்பாரி, புரவியெடுப்பு போன்ற எல்லா விழாக்களிலும் எல்லா வயதிலும் உள்ள பெண்களும் கலந்துகொள்கிறார்கள். எனவே, சபரிமலைக்குப் பெண்கள் போகக்கூடாது என்று சொல்வது இயற்கைக்கு மாறானது. எனவே, வாய்ப்புள்ள பெண்கள் சபரிமலைக்குப் போவதில் தவறேதுமில்லை. பொதுவாகவே வீட்டு விலக்காகியிருக்கும் பெண்கள் கோயிலுக்குப் போவதைத் தவிர்த்துவிடுவார்கள். அதிலும் கடுமையான விரதத்தை உள்ளடக்கிய அய்யப்பன் கோயிலுக்கு அவர்கள் விலக்கு நேரத்தில் போவார்கள் என்று சந்தேகப்படுவதில் நியாயமே இல்லை. தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், இந்தியப் பண்பாட்டு வழக்கத்தை அறியாதவர்கள் அல்ல. எனவே, அரசியல் ஆதாயம் தேடாமல் பெண்களை கோயிலுக்கு அனுமதிப்பதுதான் நியாயமானது.

*- தோழர் சரவணகுமார் முகநூல் பதிவிலிருந்து...*

●



> **தொழிலாளி வர்க்கம் வெல்ல முடியாத சக்தியாக உருவாக வேண்டுமெனில் மார்க்சிய அடிப்படையில் உருவான சித்தாந்த ஒற்றுமை, அமைப்பு ஒற்றுமை மூலம் செழுமைப்பட வேண்டும். ஏனெனில் மூலதனத்தை எதிர்த்து போராடும் உழைக்கும் மக்களுக்கு உள்ள ஒரே ஆயுதம் அமைப்பு தான்.**
>
> **- தோழர் லெனின்**

# ஆயுஷ்மான் பாரத் யாருக்காக?

இன்னும் ஆறு மாத காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வரக்கூடிய சூழலில் எதைச்சொல்லி வாக்கு கேட்பது என்ற நிலையில் மத்திய மோடி அரசால் கொண்டு வரப்பட்டது தான் மக்கள் நல திட்டம் என பறைசாற்றப்படுகிற ஆயுஷ்மான் பாரத் திட்டம். இந்திய தேசம் முழுவதும் 10 கோடி குடும்பங்கள் 50 கோடி ஏழை, எளிய இந்திய மக்கள் சுகாதாரத்திலே தன்னிறைவு பெறப்போகிறார்கள். இந்திய தேசம்முழுமைக்கும் தனியார் மற்றும் அரசு மருத்துவமனை களில் முற்றிலும் இலவசமாக எல்லா நோய்களுக்கும் சிகிச்சை பெறலாம். உலகிலேயே அதிகம் பேருக்கு இலவச காப்பீடு மூலம் சிகிச்சை கிடைக்கும் மிகப்பெரியவாய்ப்பினை இந்திய மக்களுக்கு பாரதப் பிரதமர் மோடிஅவர்கள் அளித்துள்ளார். இனி கார்டு இருந்தால் போதும் உலகம் உங்கள் கையில் என்ற வகையில் படாடோபமாக விளம்பரப்படுத்தப்படும் இத்திட்டம் உண்மையிலேயே பெரும் பலனை தரப்போவது யாருக்கு? பெரும் ஏமாற்றத்தை தரப்போவது யாருக்கு? இத்திட்டத்திற்கு 10,000 கோடி ரூபாய்கள் ஒதுக்கப் போகிறார்களே, குடும்பம் ஒன்றிற்கு வருடத்திற்கு 5 லட்சம் ரூபாயும் தரப்போகிறார்களே, 1350 நோய்களுக்கு இலவச மருத்துவம் கொடுக்கப் போகிறார்களே என்று எதிர்பார்த்தால் இது ஏறத்தாழ மோடி அவர்கள் தேர்தல் காலத்திலே கருப்புப்பணத்தை எடுத்து குடும்பத்திற்கு 15 லட்சம் டெபாசிட் செய்வேன் என்று முழங்கிய ஏமாற்றும் திட்டத்தின் கதைதான்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்திலே நடைமுறையிலுள்ள முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத்திட்ட நடைமுறையோடு சற்று இத்திட்டத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமேயானால் உண்மை நிலை தெரியவரும். இன்று தமிழக முதல்வரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ.1350 கோடி ஒதுக்கீடுசெய்யப்பட்டு 1027 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒருசில குறிப்பிட்ட சிகிச்சைகளை தவிர்த்து ஒரு குடும்பத்திற்கு ஒரு லட்சம் மட்டும் தான் ஒரு வருடத்திற்கு கொடுக்கப்படுகின்ற. இத்திட்டத்தின் தற்போதைய பயனாளிகளின் எண்ணிக்கை 1.57 கோடியாகும். ஒரு சிறு கணக்கு போடுவோம். 1.57 கோடி பேருக்கு 1350 கோடி செலவு செய்தால், ஒரு வரு டத்திற்கு ஒரு லட்சம் மட்டும் தான் கொடுக்க முடியும்என்றால் 50 கோடி பேருக்கு 50,000 கோடி செலவு செய்தாலும் ஒரு குடும்பத்திற்கு ஒரு லட்சம் காப்பீட்டு தொகையே கொடுக்க முடியும். ஆனால் வெறும் 10,000 கோடியை ஒதுக்கிவிட்டு குடும்பத்திற்கு 5 லட்சம்காப்பீடு கொடுக்க முடியும் என்பது என்ன கணக்கோ தெரியவில்லை. பிரதமர் மோடி அவர்களுக்குதான் வெளிச்சம். மேலும் கடந்த 10 ஆண்டுகளாக தமிழகத்திலேயே காப்பீட்டுத் திட்டம் வளர்த்துள்ள விளைவுகளை சற்று விரிவாகப்பார்த்தால் நமக்கு சில உண்மைகள் புரியும். அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளை காப்பீடு அட்டை வைத்திருப்போர் மற்றும் இல்லாதவர் என இருபிரிவுகளாக பிரித்து அட்டை உள்ளோர்க்கு உடனடி வைத்தியம், தனிச்சிறப்பு வார்டு, சில இடங்களில் ஏசி உள்பட அறுவை சிகிச்சைகளிலும் முன்னுரிமை என பல சலுகைகள்.

அட்டை இல்லாதோர்க்கு இரண்டாம் தர சிகிச்சை. தரையில் பாய்போட்டுத்தான் வைத்தியம் செய்கின்ற நிலைமை. அறுவை சிகிச்சைகளும் தாமத மாக செய்யும் நிலைமை உள்ளது. இதன் உள்ளார்ந்த அர்த்தம் என்னவென்றால் காப்பீட்டு அட்டைக்கு மக்களை பழக்கப்படுத்துவது. கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மனங்களில் இனிவரும் காலங்களில் காப்பீட்டு அட்டை இல்லாவிட்டால் நமக்கு வைத்தியம் கிடைக்காது என்கிற மனநிலையை ஏற்படுத்துவது தான் இதன் உள்ளார்ந்த நோக்கம். தனியார் மருத்துவமனைகளைப் பொறுத்தவரை சிறிய, நடுத்தர மருத்துவமனைகளுக்கு இது பேரிழப்பாகவும், கார்ப்பரேட் மருத்துவமனைகளுக்கு மாபெரும் விருந்தாகவும் மாறியுள்ள நிலையைத்தான் காணமுடி கிறது. சிறிய மருத்துவமனைகளில் செய்யக்கூடிய அறுவை சிகிச்சைகளுக்கு மிகக்குறைந்த கட்டணமும் குறிப்பாக வெறும் 10 ஆயிரம் ரூபாய்க்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சையை லேப்ராஸ்கோப் மூலம் செய்யவேண்டுமென சிறிய மருத்துவமனைகளை கட்டாயப்படுத்துகிற அதே வேளையில் கார்ப்பரேட் மருத்துவ மனைகளுக்கு லட்சக்கணக்கில் பணம் வாரி இறைக்கப்படுகிறது. திட்டத்தில் கூறியுள்ள 1027 நோய்களில் வெறும் 20 நோய்களுக்கு மட்டும் தான் சிறிய ரக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியும். மீதமுள்ள ஆயிரம்நோய்களுக்கும் மேல் பெரிய கார்ப்பரேட் மருத்துவமனைகளில் தான் சிகிச்சை பெற இயலும். இதன்மூலம் 4 லட்சம்ரூபாய் ஆபரேஷனுக்கு செலவு ஆகும் என்று கார்ப்பரேட் மருத்துவமனைகளில் சொன்னால் ஏழை, எளிய மக்கள் அதை நினைத்துக்கூட பார்க்கமாட்டார்கள். அதே வேளை அந்த மக்களிடம் உங்களுக்கு ஆகும் செலவுகளில் பாதி காப்பீட்டு திட்டத்தில் கிடைத்து விடும் என்று ஆசை காட்டினால் மீதியை எதை வித்தாவது கட்டி விடலாம் என்ற எண்ணம் சாதாரண மக்களிடம் தோன்றி அவர்களை அரசு மருத்துவமனைகளை விடுத்துகார்ப்பரேட் மருத்துவமனை நோக்கி நகர்த்துவதற்கு இத்திட்டம் வெகுவாக பங்களிக்கிறது என்பதைத் தான் தமிழக காப்பீட்டு திட்ட அனுபவம் வெளிச்சம் போட்டு காட்டுகிறது. அரசு ஏன் காப்பீட்டுத் திட்டம் நோக்கி மக்களை தள்ளுகிறது.

என்னிடம் செலவு செய்ய பணம் இல்லை என்பதே அரசின் வாதம். வரவு-செலவு பற்றாக்குறை தலைக்குமேல் உள்ளது. இதற்கு மேலும் அரசால் சேவைத்துறைக்கு செலவு செய்ய இயலாது. எனவே மருத்துவத்தை இனிமேல் மக்களே, நீங்களாக கவனித்துக்கொள்ளுங்கள். உங்கள் சுகாதாரம், உங்கள் பொறுப்பு என்று கூறி சுகாதாரத்தை அரசு தன் பொறுப்பிலிருந்து விலக்கிக்கொள்ளும் முடிவு தான் காப்பீட்டுத் திட்டம். சரி காப்பீட்டு நிறுவனம் என்னசெய்கிறது என்று பார்த்தால் இன்றைய கணக்குப்படியே ரூபாய் 10,000 கோடியை பிரதமர் காப்பீட்டு நிறுவனத்திடம் கொடுத்துவிட்ட உடனேயே அவர்கள் 3ஆயிரத்து 500 கோடியை தனது ஒரு வருட லாபத்திற்காக எடுத்து வைத்துக் கொள்வார்கள். மற்றொரு 3 ஆயிரத்து 500 கோடியை நிர்வாகச் செலவுகளுக்கு ஒதுக்கி விட்டு மீதமுள்ள 3 ஆயிரம் கோடியைதான் மக்களுக்கான மருத்துவச் செலவு தொகை என்று கூறி பல்வேறு மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிப்பார்கள்.எனவே எந்தக் கோணத்தில் பார்த்தாலும் காப்பீட்டுத் திட்டத்தால் அதிகம் பயனடையப்போவது கார்ப்பரேட் மருத்துவமனைகளும் கார்ப்பரேட் இன்சூரன்ஸ் கம்பெனிகளும் தான் என்பது கடந்த காலங்களில் கண்டுள்ள அனுபவமாகும்.

இதே போல இன்னொரு கணக்கையும் பார்த்தோமேயானால் இதே 10 ஆயிரம் கோடிகளுக்கான சுகாதார திட்டம் என்று ஒரு நல்ல அரசு நினைத்தால் ஏறத்தாழ வருடத்திற்கு 20 எய்ம்ஸ் தரத்திலான மருத்துவமனைகளை உருவாக்க முடியும். ஐந்தாண்டு காலத்தில் நம் தேசத்தில் குறைந்தது 100 எய்ம்ஸ் மருத்துவ மனைகளை உருவாக்க இயலும். மேலும் அப்படி ஒருவேளை உருவாக்கிவிட்டால் அனைத்து மக்களுக்கும், அனைத்து வியாதிகளுக்கும் அனைத்து அறுவை சிகிச்சைகளுக்கும் முற்றிலும் இலவசமாக கொடுத்து விடலாம் என்பதை செய்ய முயற்சிக்குமா மோடி அரசு? தற்போது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் வெறும்1350 நோய்களுக்கு மட்டும் தான் காப்பீடு கொடுக்கப்படுகிறது. இருக்கின்ற நோய்களின் எண்ணிக்கையோ பல லட்சங்களை தாண்டியுள்ளது. இது மட்டுமல்லாது மேற்கண்ட அனைத்து நோய்களும் வந்தபின் காக்க வேண்டியவையே.

இதற்கும் மேலாக நோய் வராமல்தடுக்கக்கூடிய முதல் நிலையிலேயே தடுக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை நல மையங்கள் (Wellness Centre) என்ற பெயரில் மாற்றி நோய் தடுப்பு வேலைகளில் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கும் ஆரம்ப சுகாதாரர நிலையங்களுடைய பங்கினை மறுதலிக்கும் திட்டத்தினையும் இந்த ஆயுஷ்மான் பாரத் கொண்டுள்ளது என்பது மேலும் நம்மை வேதனைக்கு உள்ளாக்குவதாகும். அதிலும் கொடுமை என்னவென்றால் இந்த நல மையங்கள் எல்லாவற்றையும் காலப்போக்கில் தனியார்கார்ப்பரேட் நிறுவனங்களின் கண்காணிப்பில் விடுவதற்கும் யாரேனும் பெரும் செல்வந்தர்களின் தயவில் இவைகளை விட்டுவிட்டு அரசு முழுமையாக தனது சுகாதார பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ளும் அவலமான நிலையையும் நமது பாரதப் பிரதமர் ஏற்படுத்தியுள்ளார் என்பதையும் சேர்ந்து நாம் கவலை யோடு நோக்க வேண்டியுள்ளது.எப்படிப் பார்த்தாலும் உலக வங்கியின் கட்டளைக்கிணங்க சுகாதார சேவையிலிருந்து அரசு கூடிய விரைவில் தன்னை விடுவித்துக் கொண்டு இதுவரை சுகாதார சேவையை இலவசமாக பெற்றுக்கொண்டிருந்த மக்களை இனிமேல் விலைகொடுத்து வாங்கிக் கொள்ளும் கொள்முதல்காரர்களாக மாற்றுவதற்கான முதல் படிதான் நமது பாரதப் பிரதமர் செப்டம்பர் 25 ஆம்தேதிதுவக்கி வைத்துள்ள ஆயுஷ்மான் பாரத் திட்டம்.இனி மருத்துவ காப்பீட்டு அட்டை இல்லாதவர்க்கு இவ்வுலகில் சுகாதாரத்துடன் வாழ வழியில்லை என்பது தான் நிதர்சனமான உண்மை.

*கட்டுரையாளர்: டாக்டர். சி. கருணாகரன், மாநிலச் செயலாளர், மக்களுக்கான மருத்துவர் கழகம்*

*நன்றி : தீக்கதிர் 30/09/2018*

●

## இந்தியாவின் தாய் பசு - உத்தரகாண்ட் பாசக அரசு தீர்மானம்!

பசு நாட்டின் தாய் (ராஷ்டிர மாதா) என அறிவிக்க கோரி பாசக ஆட்சி செய்யும் உத்தரகாண்ட் மாநில சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அம்மாநில கால்நடைத்துறை அமைச்சர் ரேகா ஆரியா முன்மொழிந்த இந்த தீர்மானத்தை காங்கிரசு உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ளன.

பசுவை தாயாக அறிவிக்க கோரும் இந்த பாசக ஆட்சியில்தான் `மாட்டிறைச்சி' ஏற்றுமதியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஒருபக்கம் கார்பரேட் நலனுக்காக மாட்டிறைச்சியை அதிகளவில் வெளிநாடுகளுக்கு அனுப்பும் பாசக அரசு பசுவை `தாய்', `தெய்வம்' என பித்தலாட்டம் செய்துவருகிறது. சிறுபான்மையின மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மாட்டிறைச்சி உண்ணக்கூடாது என அவர்கள் மீது வன்முறையையை ஏவி வருகிறது.

ஆனால், பார்ப்பனர்கள் பசுவை யாகம், வேள்வி என்ற பெயரில் அதிகளவில் கொன்றதையும், மாட்டிறைச்சியை உண்டதையும் ஆதாரப்பூர்வமாக அம்பலப்படுத்துகிறார் அம்பேத்கர்.

"பசுவின் புனிதத் தன்மை என்பது ஒரு ஏமாற்று வித்தையே. காரணம் பசு தெய்வமோ, அதன் பெயரில் ஒரு கோயிலோ இருந்தது இல்லை. உண்மையில் இந்து மதத்திற்கு `ஒற்றை அடையாளம்' என்று ஒன்று இல்லை. எனினும் நவீன காலங்களில் இந்த ஒற்றை அடையாளத்தை இந்துத்துவ சக்திகள் முன்வைக்கின்றன. பசுவிற்கு புனிதம் கற்பிக்கும் அணுகுமுறையை இத்தகைய போக்கின் ஒரு அம்சமாகவே நாம் மதிப்பிட வேண்டும்" என `பசுவின் புனிதம் மறுக்கும் ஆதாரங்கள்' என்ற நூலில் குறிப்பிடுகிறார் டி.என். ஜா.

# அந்தரங்க உரிமைகளுக்கு ஆப்பு வைக்கும் ‘ஆதார்’

## (மக்களின் தனிநபர் தகவல்களை அரசே சட்டப்பூர்வமாக திருடும் திட்டம்)

ஒருவரின் அந்தரங்க உரிமை என்பது அடிப்படை உரிமை என்று 2017 ஆகஸ்டில் அறிவித்த உச்சநீதிமன்றம், இதற்கு நேர் முரணாக 2018 செப்டம்பரில் அரசின் சேவைகளுக்கு ஆதார் எண் கட்டாயம் என்று தீர்ப்பளித்துள்ளது. வங்கி, கைப்பேசி இணைப்பு உள்ளிட்ட சேவைகளுக்கு ஆதார் எண் அவசியமில்லை என்றும், தனியார் நிறுவனங்கள் ஆதார் விவரம் கேட்டது சட்டவிரோதம் என்றும் கூறியுள்ள உச்சநீதிமன்றம் வருமானவரி(பான்), மதிய உணவு திட்டம் உட்பட சுமார் 16 க்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு ஆதார் எண் கட்டாயம் என்று உத்தரவிட்டுள்ளது. அதாவது ஆதார் எண்ணை ஒவ்வொரு குடிமகனும் பெற்றிருப்பது கட்டாயமாகிறது.

### ஆதாரின் தொடக்கம்

1999 கார்கில் போருக்குப் பின் வாஜ்பாய் தலைமையிலான பிஜேபி அரசு எல்லைப்புறத்தில் வாழும் மக்களுக்கு தனித்த அடையாளத்தை தருவது பற்றி முடிவு செய்தது. அதை இந்திய நாட்டின் எல்லா மக்களுக்கும் அடையாள அட்டை என விரிவுபடுத்தி `இந்திய தனி அடையாள அதிகாரம்’ (UDHAI) எனும் அமைப்பை ஏற்படுத்தி ஆதார் என்னும் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் - (மன்மோகன் - சோனியா) அரசு தொடங்கியது. இப்போது பிஜேபி - மோடி அரசு ஆதாரை எல்லா திட்டங்களுக்கும் அவசியம் என விரிவுபடுத்தி தனிநபர் தகவல்களை திரட்டும் பணியை தீவிரப்படுத்தி உள்ளது. இவ்வாறுதான் முதலில் கோடு போட்டது வாஜ்பாய் அரசு, அதன் மேல் ரோடு போட்டது மன்மோகன் அரசு, இப்போது அந்த ரோட்டில் புல்டோசரை ஓட்டி மக்களை சாகடிக்கிறது மோடி அரசு!

### ஆதார் எண்ணும் அரசின் நோக்கமும்

ஆதார் அட்டை வழங்கப்படுவதின் நோக்கம் அனைவருக்கும் அரசின் நலத்திட்டங்கள் உரிய முறையில் சென்றடைவதற்கு என்று சொல்லப்பட்டது. வங்கிக் கணக்கு, தொலைபேசி, கைபேசி இணைப்பு, ஓட்டுநர் உரிமம் போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆதார் அவசியமாக்கப்பட்டது. பள்ளிகளில் குழந்தைகளின் மதிய உணவுக்கும் ஆதார் கட்டாயமாக்கப்பட்டது. ஆதார் அடையாளச் சான்று மட்டுமே. இந்தியக் குடியுரிமைக்கான சான்று அல்ல என்று அறிவுறுத்தப்பட்டது. பெரும்பான்மை மக்களிடையே ஆதார் இல்லாவிட்டால் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து ஒன்றும் கிடைக்காது என்ற அச்சம் உருவாக்கப்பட்டதால் மக்கள் தங்களுடைய முகம், விரல் ரேகைகள், விழித்திரை போன்ற உயிரளவுகளைக் (Biometrics) கொடுக்க முன் வந்தனர். ஆனாலும் ஒரு பகுதி மக்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் ஆதார் திட்டம் மக்களை வேவு பார்க்கும் திட்டம்; அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று கூறி வந்தனர்; பொதுநல வழக்குகளும் தொடுக்கப்பட்டன.

“ஒருவருடைய ஆதார் எண் `தேசிய தகவல் கிடங்கு’ மற்றும் தனியார் தரவுகளுடன் இணைக்கப்படுவதன் மூலம் அவருடைய பழக்க வழக்கங்கள், உணவு முறை, வங்கிச் செயல்பாடுகள், அரசியல் தொடர்பு போன்ற தனியுரிமைத் தகவல்கள் சட்டபூர்வமாகத் திருடப்படும்; நாட்டு மக்களுடைய தனிமனித சுதந்திரத்தை, தேச முன்னேற்றம் என்ற பெயரில் விலை பேச முடியாது” என்கிறார் நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்யா சென் அவர்கள்.

### ஆதார் எண்ணும் அதிகார வர்க்க முறைகேடுகளும்

இது நடைமுறைக்கு வந்தால் பொது விநியோக முறையில் நடக்கும் முறைகேடுகளோ, நிர்வாகத்துறையில் நடக்கும் ஊழல்களோ எள்ளளவும் குறையாது. மக்களின் கண்காணிப்புக்கு உட்படாமல் முழக்க முழுக்க அதிகார வர்க்கத்தின் மூலமும் அரசியல் தலையீடுகளின் மூலமும் நடக்கும் ஒரு அமைப்பு முறையில் ஆதார் எல்லாவற்றையும் சரி செய்துவிடும் என்பது மக்களை ஏமாற்றும் செயலே! உண்மையில் நிர்வாகச் சீர்கேடுகளால் கோபமடைந்து வீதிக்கு வந்து போராடிக் கொண்டிருக்கும் பெரும்பான்மை தொழிலாளர்கள், ஏழைமக்கள், உழவர்கள், சிறுபான்மை இன மக்கள் ஆகியோரை கண்காணிக்கவும் அவர்கள் மேல் அரசு எந்திரத்தைக் கட்டவிழ்த்து விடவும், தேவைப்பட்டால் அவர்களைக் கொலை செய்யவுமே இந்த ஆதார் எனும் தனிநபர் அடையாளம் பயன்படும். உலக வங்கி மற்றும் கார்ப்பரேட்டுகளின் இசைவுக்கு ஏற்றபடி நடனமாடும் இந்திய அரசு இதை மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தும் என்று கருதுவது `ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத’ கதைதான்.

### தேசத்தின் பாதுகாப்பும் குடிமக்களின் பாதுகாப்பும்

தேசத்தின் பாதுகாப்பு என்பது குடிமக்களின் பாதுகாப்பே அன்றி வேறில்லை. தனி மனிதர்களின் தரவுகள், இரகசியங்களை இந்த ஆதார் எண் முறை நூறு விழுக்காடு பாதுகாப்பாக இருக்கும் என்று ஆணித்தரமாக அரசால் சொல்லப்பட்டது. ஆதார் எண் பாதுகாப்பு குறித்து தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (ட்ராய்) அமைப்பின் தலைவர் சர்மா தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் ஒருவர் விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டார். சர்மா ஆதார் மையத்தில் தலைமைப் பொறுப்பில் முன்பு பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சவாலை முறியடித்த வெளி நாட்டுக்காரர்

இவர் `என்னுடைய ஆதார் எண்களை இங்கே நான் பதிவு செய்கிறேன். அதனால் என்னுடைய தனிநபர் வாழ்வில் என்ன பிரச்சனை வரக்கூடும் என்று யாராவது ஒருவர் பதில் கூறுங்கள்’ என்று தன்னுடைய ஆதார் எண்ணை பதிவு செய்திருக்கிறார்.

இதனைச் சவாலாக ஏற்றுக் கொண்ட பிரான்சு நாட்டினைச் சேர்ந்த ஒருவர் சர்மாவின் ஆதார் எண்ணை ஊடுருவி (ஹேக்) அவரின் பிறந்த தேதி, முகவரி, அலைபேசி எண் அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக பதிவிட்டிருக்கிறார். மேலும் சர்மாவின் வங்கிக் கணக்குகள் எதிலும் அவருடைய ஆதார் எண் இணைக்கப்படவில்லை என்றும் தகவல் அளித்திருக்கிறார் அந்த நபர்.

எலியாட் ஆண்டர்சன் என்ற பெயரில் இருக்கும் அந்த ஊடுனர் (ஹேக்கர்) மேலும் இது போன்ற பாதுகாப்பற்ற தன்மையை கருத்தில் கொண்டுதான், மக்களின் ஆதார் எண்ணை பொது இடங்களில் சமர்பிக்கவோ, இணையத்தில் வெளிப்படையாக பார்வையிடவோ அனுமதிக்கக் கூடாது என்று அவர் அறிவுரை செய்திருக்கிறார்.

இதனைப் பார்த்த பலரும் அடுக்கடுக்காக சர்மாவிடம் கேள்விகள் கேட்டு குடைந்துவிட்டார்கள். இது தொடர்பாக ஊடகங்கள் அவரிடம் பேச முற்பட்ட போது அங்கிருந்து பதில்கள் ஏதும் கிடைக்கவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் “ஸ்ரீ கிருஷ்ணா கமிட்டி” எனும் குழு ஆதார் தொடர்பான பாதுகாப்புகள் குறித்து சமர்பிக்கப்பட்ட ஆய்வறிக்கைக்குப் பின்புதான் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இவ்வறிக்கையில், ஆதார் தனிநபர் விவரங்கள் மிகவும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருக்கிறது என்று அந்தக் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### உலக நாடுகளில் இல்லாத நடைமுறை

ஆதார் போன்று விவரங்களைச் சேமிக்கும் முறை அமெரிக்கா, அய்ரோப்பா போன்ற தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த நாடுகளில் கூடக் கிடையாது.

ஆதார் ஒரு அற்புதமான தொழில் நுட்ப வடிவமாக இருந்தால், தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னேறியுள்ள நாடுகளே ஏன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை?

ஒற்றை எண் அடையாள அமைப்பை அனைத்துக்கும் பயன்படுத்துவது நல்ல யோசனை அல்ல என அய்ரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் உள்ள பல கணினி அறிவியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களும் வாதிடுகின்றனர்.

உயிரளவுகள் (பயோமெட்ரிக்) தகவலுடன் தொடர்புடைய இதே போன்ற தேசிய அடையாள அட்டைத் திட்டத்தை 2010-ம் ஆண்டு பிரிட்டன் கைவிட்டது.

இஸ்ரேலில் கைரேகை அல்லாத, ஒரு அடையாள அட்டை உள்ளது. இங்கு குடிமக்களின் தகவல்கள் எங்கும் சேகரிக்கப்படாது. ஆனால், தகவல்கள் அடையாள அட்டையில் மட்டும் இருக்கும்.

அமெரிக்காவிலும் இதுபோன்ற அடையாள அட்டை திட்டம் தேசிய அளவில் இல்லை. கலிபோர்னியா மற்றும் கொலராடோ ஆகிய இரண்டு மகாணங்களில் மட்டும், ஓட்டுநர் உரிமை விண்ணப்பங்களுக்காக கைரேகை எடுக்கப்படுகிறது.

இந்த நாடுகளில் பெரும்பாலானவை, தங்கள் நாட்டுக்கும் வரும் வெளிநாட்டவரின் உயிரளவுகள் தகவல்களையே சேகரிக்கின்றன. தங்களது சொந்த குடிமக்களின் தகவல்களை அல்ல.

### அமெரிக்காவும் தகவல் திருட்டும்

நவீன தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் உலக நாடுகளின் தகவல்கள், இரகசியங்களைத் திருடுவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. ஒரு முறை மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் அரசு நிறுவனங்கள் தங்களுடைய கணினி செயல்பாட்டிற்கு மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் வின்டோஸ் எனும் இயக்கச் செயலியைப் பயன்படுத்தக்கூடாது, அதற்குப் பதிலாக ஓபன் சோர்ஸ் என்று சொல்லப்படும் லினக்ஸ் போன்ற இயங்கு தளத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். இதற்குக் காரணம் விண்டோஸ் இயங்குதளத்தின் மூலம் தகவல் திருடப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் கூறியிருந்தார். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உலக கார்ப்பரேட் நிறுவனங்களின் வணிகப் போட்டி தவிர்க்க இயலாமல் ஒரு இராணுவ நடவடிக்கையில் முடியும் என்பதால் அனைத்து நாடுகளுமே தகவல் திருட்டில் ஈடுபடுகிறது என்றாலும் அமெரிக்கா இதில் முதன்மையாக உள்ளது. இதற்கு ஆதார் தரவுகள் பெரிதும் உதவக்கூடும். சமீபத்தில் இந்திய அரசு குடிமக்கள் பயன்படுத்தும் அனைத்து கணினிகள், திறன் பேசி(ஸ்மார்ட்போன்)கள் ஆகியவற்றை வேவு பார்க்க ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது.

### தகவல் கசிவு எனும் தங்கச் சுரங்கம்

ஆதார் தரவுகள் சேகரிக்கப்பட்ட பின் தனி நபரைப் பொறுத்த வரையில் அதன் தரவுகள் உச்ச பாதுகாப்புத் தன்மை கொண்டவையாகிறது. ஆனால் அதைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை காட்டப்படுவதில்லை. அரசு நிறுவனத் துறைகள், வங்கிகள் மற்றும் முகவர்கள் சேகரித்த ஆதார்களின் தரவுகள் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகிறது என்று சொல்ல முடியாது. ரிலையன்ஸ் ஜியோ சேகரித்த ஆதார் தரவுகள் ஆன்லைனில் கசிந்ததால் அது நிச்சயம் ஊடுனர்களின் தரவுத் தொகுப்பில் சேமிக்கப்பட்டிருக்கும். 200 கும் மேற்பட்ட அரசின் இணையத்தளங்களிலேயே வெளிப்படையாக ஆதாரின் தரவுகள் வெளியிடப்பட்டிருந்தது தற்போது நீக்கப்பட்டுள்ளது. நிதி மற்றும் வங்கிச் செயல்பாடுகள் ஆதாருடன் இணைக்கப்பட்டதால் அது இணையத்தள குற்றவாளிகளுக்கு நிச்சயம் ஒரு தங்கச் சுரங்கமாகவே இருக்கும். ஒரு முறை தரவுகள் கசிந்து விட்டால் அதை ஒன்றும் செய்ய முடியாது.

சி.ஐ.எஸ் (சென்டர் ஆஃப் இண்டர்நெட் அண்ட் சொசைட்டி) எனும் அமைப்பு இதுவரை 135 மில்லியனுக்கும் மேல் இந்தியர்களின் ஆதார் தரவுகள் திருடப்பட்டுள்ளதாக அறிக்கை கொடுத்துள்ளது.

விக்கிலீக்ஸ் எனும் இணையத்தள நிறுவனம் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ (CIA) வினுடைய எக்ஸ்பிரஸ்லேன் (ExpressLane) எனும் திட்டம் பற்றிய ஆவணங்களை வெளியிட்டது. அதில் ஓ.டி.எஸ்(OTS-Office of Technical Services) எனும் சி.ஐ.ஏ வின் கிளை ஒன்றுதான் உலகெங்கிலுமுள்ள நாடுகளுக்கு ஸ்கேனர் போன்ற பயோமெட்ரிக் கருவிகளை விநியோகம் செய்கிறது. அவ்வப்போது மென்பொருளை மேம்படுத்தல் (Software Upgrade) என்ற பெயரில் அக்கருவிகளின் நிரல்களில் மாற்றம் செய்து தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதாகத் தெரிவிக்கின்றது.

தற்போது வங்கி உட்பட பல உயிர்ப்பான சேவைகளுக்கு ஆதார் தேவையில்லை என்று அறிவித்திருக்கும் அரசு இதுவரை பெறப்பட்ட ஆதார் தரவுகளை என்ன செய்ய வேண்டும் என்று எதுவும் சொல்லவில்லை. (அப்படிச் சொன்னாலும் அதனால் பயனில்லை என்பது வேறு விசயம்.)

இன்று உலகப்பந்து முழுமையும் கார்ப்பரேட்டுகள் மற்றும் ஏகாதிபத்தியங்களின் கண்காணிப்புக்குள் வந்துவிட்டது என்பது தான் உண்மை. தலைக்கு மேலே சுழலும் செயற்கைக்கோள் சாதனங்களும், ஜி.பி.எஸ்., ஸ்மார்ட் போன் கருவிகளும் தனிமனித சுதந்திரம், தனிமனித இரகசியம் போன்ற முதலாளியத்தின் முகமூடிகளைக் கிழித்தெறிந்து விட்டது என்பதே உண்மை. ஆதார் குளறுபடிகளைப் பார்க்கும் போது சித்தரின் பாடல் ஒன்றுதான் நினைவுக்கு வருகிறது. அவர் இப்போதிருந்தால் ஒரு வேளை இப்படிப் பாடியிருப்பாரோ?

“தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை

ஆதார்எண் ஏதுக்கடி குதம்பாய் ஆதார்எண் ஏதுக்கடி! ”

●

## ராஜஸ்தான் - சாதிய பிற்போக்கின் அடையாளம்

ராஜஸ்தானின் பாரத்பூர் மாவட்டத்தில் உள்ளது பெஹ்நாரா கிராமம். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சாந்தா தேவி என்ற பெண், நாள்தோறும் காலையில் உயர் சாதியினரின் குடியிருப்புக்குள் சென்று இரும்பு கரண்டியால், மனிதக் கழிவுகளை அள்ளி இரும்பு வாளியில் போட்டு சுமந்து சென்று அப்புறப்படுத்துவதும் பணியை செய்து வருகிறார்.

இந்த வேலைக்காக சாந்தா தேவிக்கு கொடுக்கப்படும் கூலி வெறும் 2 துண்டு ரொட்டிகள் மட்டுமே. இதற்காகவே தனது விவரம் தெரிந்த நாள்முதலாய் சாந்தி தேவி, சக மனிதர்களின் (?) கழிவுகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்.

65 வயதாகும் சாந்தா தேவி, அவரது சகோதரி முன்னி, அவரின் கணவர் ராம்புகு ஆகிய 3 பேரும் 2 ரொட்டிக்காக மனிதக் கழிவுகளை அள்ளிச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். பெஹ்நாரா கிராமத்தில், தாழ்த்தப்பட்ட மெஹ்தார் சமூகத்தைச் சேர்ந்த 5 குடும்பங்கள் மட்டும் வசிக்கின்றனர். இவர்கள் 250 குடும்பங்களாக உள்ள ஜாட் மற்றும் ஜாட்வாஸ் வகுப்பினரின் வீடுகளிலுள்ள உலர் கழிப்பறை உட்பட அனைத்தையும் சுத்தப்படுத்த வேண்டும்.

சில நேரங்களில், சாந்தா தேவி, அவரின் சகோதரி முன்னி ஆகியோரின் மகன்களை, கட்டாய துப்புரவுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கு, ஜாட், ஜாட்வாஸ் வகுப்பினர் தயங்குவதில்லை.

பெஹ்நாரா கிராமத்திலுள்ள கழிவறையைச் சுத்தம் செய்வது, கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்வது, இறந்த மனித உடல்களை அப்புறப்படுத்துவது ஆகிய பணிகளை சாந்தி தேவியின் குடும்பத்தினர்தான் செய்தாக வேண்டும்.

ஆனால், சாந்தி தேவி மற்றும் முன்னியின் குடும்பத்தினர் கோயிலுக்குள் நுழைய முடியாது. இவர்களின் குழந்தைகள், பள்ளிகளில் மற்ற குழந்தைகளோடு சரிசமமாக அமர்ந்து கல்வி கற்க முடியாது.

மோடியின் டிஜிட்டல் இந்தியாவில் 200 ஆண்டுகள் பின்தங்கிய மாநிலமாக உள்ளது ராஜஸ்தான்.

தூய்மை இந்தியா திட்டமெல்லாம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக மட்டும் தான் என்பது இது போன்ற செய்திகள் மூலம் மேலும் மேலும் அம்பலமாகி வருகிறது.

# ‘காப்பியடிக்கப்பட்ட’ அரசியல் சட்டம்!

அரசியல் நிர்ணய சபைக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்ட சட்ட வல்லுநர் பி.என்.ராவ் நமது அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி விவாதிக்க அமெரிக்கா, கனடா, அயர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

நமது அரசியலமைப்பு சட்டத்தின் `ஜீவாதார உரிமைகள்’ அமெரிக்க - அயர்லாந்து அரசியல் சட்டங்களைப் பின்பற்றியவை.

`அரசாங்க கொள்கை நோக்கங்கள்’ (Directive Principles of State Policy) அயர்லாந்து நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருப்பதை முன்மாதிரியாக கொண்டவை.

இப்படி உலகத்தின் புகழ்மிக்க அரசியல் அமைப்புச் சட்ட விதிகளை நமது சட்டத்திலே பொருத்தியவர்கள் கூட்டாட்சி முறை பற்றி, மத்திய - மாநில உறவுகள் பற்றி - என்ன செய்தார்கள் தெரியுமா?

எந்த 1935ஆம் ஆண்டு சட்டத்தை `பிரிட்டிசார்’ உருவாக்கியது என்றும், இந்திய நிலைமைகளுக்கு ஒத்து வாராதது என்றும், சனநாயக கொள்கைகளுக்கு `முரணானது’ என்றும் கடுமையாகக் குற்றம் சாட்டினார்களோ, அதே சட்டத்தை அப்படியே பின்பற்றினார்கள்; பல சந்தர்ப்பங்களில் அப்படியே வரிக்கு வரி இடம் பெயர்த்து வைத்துக் கொண்டார்கள்.

புகழ்பெற்ற அரசியலமைப்புச் சட்ட விமர்சகராகிய ஆகிய துர்காதாஸ் பாசு தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 75சதவீதம் 1935ஆம் ஆண்டு சட்டத்தை மூலமாக கொண்டது - அனுபவத்தால் சில மாற்றங்கள் தவிர - என்று குறிப்பிடுகிறார்.

புகழ்பெற்ற அரசியல் சட்ட நிபுணர் சர் ஐவர் ஜென்னிங்ஸ், இந்திய “அரசியலமைப்புச் சட்டம் நேரடியாக 1935ம் ஆண்டு சட்டத்தில் இருந்து உருவானது. உண்மையில் பல விதிகளில் வாசகங்கள் அப்படியே காப்பி அடிக்க பட்டிருக்கின்றன” என்று கூறுகிறார்.

“1950 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள மிகவும் விந்தையான அம்சங்களில் ஒன்று என்னவென்றால் 1935ஆம் ஆண்டு சட்டத்தில் இருந்து பரவலாக கடன் வாங்கியிருப்பதுதான். பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு டோமினியனாக இருந்து சுதந்திரக் குடியரசாக மாறியதால் - அதன் விளைவாக செய்யப்பட்ட குடியரசு தலைவர் தேர்தல், ஜீவாதார உரிமைகளை பற்றிய பகுதிகள், அரசாங்க கொள்கை நோக்கங்கள், தேர்தல் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் - போன்றவைதான் (அரசியலமைப்புச் சட்டத்தில்) புதிதாக சேர்க்கப்பட்டவை. பிரிட்டிஷ் அரசை வன்மையாக எதிர்த்து வந்த இந்திய தலைவர்கள், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைநாட்டும் நோக்கத்துடன் உருவாக்கிய ஒரு அரசியல் சட்டத்தை அப்படியே அடிமைத்தனத்துடன் ஏற்றுக் கொண்ட அசாதாரணமான உண்மையை விளக்குவது சுலபமானது அன்று” - என்று கே. சந்தானம் கூறியிருப்பது எவ்வளவு பொருத்தமானது. எந்த 1935 ஆம் ஆண்டு சட்டத்தை காங்கிரஸ்காரர்கள் முழுமூச்சோடு எதிர்த்தார்களோ அதன் பெரும்பகுதி அப்படியே வைத்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை என்ன? வேறொரு சந்தர்ப்பத்தில் எச்.வி. காமத் சொன்ன காரணம் இதற்கு பொருத்தமாக இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் நகலை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியில் (Drafting Committee) அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், கே.எம்.முன்சி, சாதுல்லா, டி.டி கிருஷ்ணமாச்சாரி, என்.கோபால்சாமி அய்யங்கார் - ஆகியோர் உறுப்பினர்கள். டாக்டர் அம்பேத்கர் அதன் தலைவர்.

இந்த கமிட்டி பற்றிதான் எச்.வி.காமத் மிகவும் உருக்கமாக கூறினார்: “அந்த கமிட்டி உருவாக்கியதில்தான் தவறு இருக்கிறது. திரு. முன்சியை தவிர அதில் வேறு யாருமே இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டவர்கள் அல்ல. நம்மையெல்லாம் ஊக்கிவிட்ட அந்தப் போராட்ட உணர்ச்சியில் பங்கொள்வதென்பது அவர்களால் முடியாது காரியம்”.

அவர்கள் தலைசிறந்த சட்ட நிபுணர்கள் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால், மேலே குறிப்பிட்டது போல முன்சியை தவிர மற்றவர்களுக்கும், காங்கிரசுக்கும் என்ன சம்பந்தம்? சுப்ரீம் கோர்ட்டு தனது தீர்ப்பு ஒன்றில், “இந்திய அரசிலமைப்புச் சட்டம் 1935 ஆம் ஆண்டு சட்டத்தை அத்திவாரமாக கொண்டு எழுதப்பட்டது. பல முக்கிய விஷயங்களில் அடிப்படை மாற்றப்படவேயில்லை. ஏராளமான விதிகள் இதற்கு முன் உள்ள சட்டத்திலிருந்து வார்த்தைக்கு வார்த்தை இடம் மாற்றி வைக்கப் பட்டிருக்கின்றன” என்று குறிப்பிடுகிறது.

அதனால்தான் ஒரு ஆசிரியர் தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தை 1935ம் ஆண்டு சட்டத்தின் சில பகுதிகளை மட்டும் விட்டுவிட்டு எழுதப்பட்ட மறுபதிப்பு (`Palimpsest of the Act’)என்று வர்ணிக்கிறார்.

இப்படி ஒரு விமர்சனம் அ.நி.சபையில் எழுந்தபோது அதை டாக்டர் அம்பேத்கர் மறுக்கவில்லை. “இதற்கு நான் மன்னிப்பு கேட்கவில்லை. அப்படி கடன் வாங்குவதில் அவமானப்படுவதற்கு ஒன்றுமில்லை” என்று கூறினார்.

“டாக்டர் அம்பேத்கர் நமது அரசியலமைப்பு சட்டம் 1935 ஆம் ஆண்டு சட்டத்திலிருந்தும், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் சட்டத்திலிருந்து கடன் வாங்கி இருப்பது பற்றி பெருமையோடு குறிப்பிட்டார். ஆனால் நம்முடைய கடந்த காலத்திலிருந்து, இந்திய மக்களின் தனி பண்புகளிலிருந்து எதை கடன் வாங்கி இருக்கிறார் என்றும் அவர் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவர் சொல்லவில்லை.”

- என்று எச்.வி.காமத் அம்பேத்கர் பேச்சை பற்றி அரசியல் நிர்ணய சபையில் விமர்சித்தார். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் “சுதேசி தன்மை”கள் இல்லாததையே அவர் அவ்வாறு சுட்டிக்காட்டினார்.

1935 ம் ஆண்டு சட்டம் எதற்காக - எந்த சூழ்நிலையில் பிரிட்டனில் தயாரிக்கப்பட்டது என்பதை முன்பே ஆராய்ந்திருக்கிறோம்.

முதலாவதாக - அது ஒரு சுதந்திர நாட்டிற்காக தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டமன்று. இரண்டாவதாக - அந்த சட்டம் ஒரு கூட்டாட்சி முறையை ஏற்படுத்தவில்லை. அந்த நேரம் அதை உருவாக்கியவர்கள் சொன்னதெல்லாம் “தலைகீழ் முறை”யில் ஒரு கூட்டாட்சியை இந்தியாவில் உருவாக்க முயற்சி செய்கிறோம் - என்றுதான் குறிப்பிட்டார்கள். எனவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு வசதியாக ஒரு இடத்தில் - மத்திய அரசில் - டெல்லியில் -அதிகாரங்களை எல்லாம் குவித்து வைத்திருந்தார்கள். மூன்றாவதாக - அந்த சட்டம் `சுதேசிகளை’ நம்பாமல் உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும். அதனால்தான் அவர்கள் முழுமையான சுயாட்சியை மாகாணங்களுக்கு வழங்கவில்லை. மாகாணங்களில் சுதேசிகளை மேற்பார்வை செய்ய எஜமானர்கள் போல பரிபாலிக்க தங்களது ஏஜென்டுகளாக கவர்னரை நியமித்து, அந்த பதவிக்கு விசேஷ அதிகாரங்களை கொடுத்து தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்.

- இதுதான் வெள்ளைத் துரைமார்கள் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தினை ஏற்படுத்தியதன் நோக்கம். மத்திய -மாநில உறவுகளைப் பொறுத்தவரையில் அது அப்படியே சுதந்திர இந்தியாவின் சட்டத்தில் சில மாற்றங்களோடு `காப்பியடிக்க’ப்பட்டது என்றால் அதற்கு காரணம் வெள்ளை துரைமார்களுக்கு பொருத்தமாக இருந்தவை எல்லாம் டெல்லி துரைமார்களுக்கும் பொருந்தி வந்தது தான்!

வெள்ளையர்களுக்கு பின் வந்த காங்கிரஸ் துரைமார்கள் 1935ஆம் ஆண்டு சட்டத்தின் பெரும் பகுதியை அப்படியே வைத்துக் கொண்டார்கள் என்றால் அதற்கு காரணம் இரண்டு துரைமார்களின் நோக்கமும் ஒன்றாகவே இருந்ததுதான்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பழைய காங்கிரஸ் தலைவர் எஸ். என். மிஸ்ரா, “இந்தியாவில் மாநிலங்கள் (States) என்பவை கிடையா, அவை எல்லாம் மத்திய அரசின் `எஸ்டேட்டுகள்தான்’ ” (Estates) என்று குறிப்பிட்டார்.

கயாவில் நடைபெற்ற பழைய காங்கிரஸ் மாநாட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் எம். எஸ். குருபாதசாமி “திருமதி இந்திரா காந்தி மாநிலங்களின் முதலமைச்சர்களை எல்லாம் முகலாயர் காலத்துச் சபேதார்கள் நிலைக்கு குறைத்து விட்டார்” என்று குற்றம் சாட்டினார்.

ஒன்றாக இருந்து பதவி நுகர்ந்தபோது மாநிலங்களின் நிலையும், மாநில முதலமைச்சர்களின் நிலையும் அவர்களுக்குத் தெரியாமலா இருந்தது ? அவர்களுக்கு தெரியும்; அது அப்போது வசதியாக இருந்தது. இப்போது வெளியே இருக்கிறார்கள்; பகிரங்கமாகச் சொல்கிறார்கள்.

டெல்லிக்காரர்கள் முகலாய சக்கரவர்த்திகளாகவும், மாநிலத்தில் பொறுப்பு வகிப்போர் சுபேதர்களாகவும் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு துணை நிற்கும் வகையில் இயற்றப்பட்ட 1935ஆம் ஆண்டு சட்டத்தையொட்டி சுதந்திர இந்தியாவின் அரசியல் சட்டம் அதிகாரத்தை மத்திய அரசின் பால் குவித்து வைத்திருப்பது தான் இதற்கு முழு முதற் காரணம்.

*(திரு. முரசொலி மாறன் எழுதிய `மாநில சுயாட்சி’ என்ற நூலிலிருந்து...)*

●

## செய்திக் கதம்பம்

### சபரிமலையில் தீட்டுக்கழிக்க பிராமண போஜனம்

ஆர்எஸ்எஸ்-பாஜக பார்ப்பனிய கும்பலின் தடையை தாண்டி கடந்த 2.01. 2019 அன்று இரண்டு பெண்கள் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு சென்று வழிபட்டனர். புனிதம், பாரம்பரியம் என பித்தலாட்டம் செய்து வரும் காவி கும்பல்கள் இதனை எதிர்பார்க்க வில்லை. உடனே தீட்டுப்பட்டு விட்டதாகக் கூறி கோயில் நடை சாத்தப்பட்டது. உள்ளே சென்று வழிபட்ட பெண்களின் சிறுநீர், ரத்தம் இவைகள் கோயில் தரையில் சிந்தி அசுத்தமாயிருக்கும், எனவே அந்த தீட்டை கழிக்க `தாந்திரீக சமுச்சாயம்' என்ற சடங்கை செய்யவேண்டுமாம். இது போதாதென்று கூடவே `பிராமண போஜனம்' என்ற சடங்கு ஒன்றையும் அத்துடன் செய்கிறார்கள். பார்ப்பனர்கள் சாப்பிட்டு மிஞ்சும் எச்சில் இலைகளையும், பருக்கைகளையும் சன்னிதானத்தில் போட்டால் அது சுத்தமாகிவிடுமாம். இச்சடங்கு முடிந்தவுடன் பார்ப்பனர்களுக்கு பட்டு சட்டை, பட்டு வேட்டி வழங்கப்படுவதோடு தங்க கவசம் பூட்டிய சங்குகளும் வழங்கப்படுகின்றன. கேரளா முழுவதும் உள்ள கோவில்களில் இவ்வாறுதான் `தீட்டு'க் கழிக்கப்படுகின்றது. கேரளாவில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இப்படித்தான் `அவாளின்' ஒட்டுண்ணி வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

500 ஆண்டுகளுக்கு முன் சென்னை நாராயணன் நம்பூதிரிபாடு என்ற கேரள பார்ப்பனன் இவ்வாறு செய்ய வேண்டும் என (தாந்ரீக சமுச்சாயம் நூலில்)எழுதி வைத்துள்ளான்.

இந்த தந்திர சமுச்சியம் நூலைக் காட்டித்தான் உச்சநீதிமன்றத்தில் சபரிமலைக்கோவிலில் பெண்கள் நுழையக்கூடாது என்று வாதிட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் இந் நூலை வைத்துத்தான் வைக்கம் உள்ளிட்ட பல இடங்களில் பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினர் அல்லாதோர் வரக்கூடாது என்று ஆணையிட்டிருந்தனர். இந்த நூல் மலையாளத்தில் ஒரு மனுதர்மம் போன்றது, இந்த நூலை எரிக்கும்போராட்டத்தை பல மனித உரிமை அமைப்புகள் மற்றும் பட்டியல் இனத்தலைவர்கள் நடத்தியுள்ளனர்.

இது முழுக்க முழுக்க பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரிமைகள் வழங்கவேண்டும் மற்றவர்கள் அனைவரும் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்டது ஆகும். இந்த நூலை மேற்கோள் காட்டி பெண்கள் தூய்மையில்லாத வர்கள், அவர்கள் தங்களின் மாதவிடாய் பருவத்தில் கோவிலுக்குள் வரக்கூடாது, மேலும் பொதுவில் எந்த ஒரு நிகழ்விலும் கலந்து கொள்ளக் கூடாது என்று கூறிவரு கின்றனர்.

இந்த தந்திர சமுச்சியம் என்ற நூலில் பகுதி 10:11 இல் கூறுவதாவது, பிறப்பு மற்றும் மரணம் தொடர்பான நிகழ்வுகள் தீட்டானவைகள் ஆகும், என்பதோடு மிகவும் பிரச்சனைக்குரிய வாக்கியமாக இருப்பது என்னவென்றால் பார்ப்பனர்கள் மற்றும் உயர்ஜாதினரைத் தவிர வேறு யாரும் கோவிலுக்குள் வரக்கூடாது என்றும், அவர்கள் கோவிலுக்கு வந்தால் கோவிலில் அசுத்தமான சூழல் ஏற்பட்டுவிடும் அவர்கள் கோவிலில் நுழைவது, ரத்தம் மற்றும் சிறுநீர்கழிக்கும் இடங்களில் நாற்றம் எடுப்பது போல் இருக்கும் என்று எழுதிவைத்துள்ளார். கோவிலின் புனிதம் மற்றும் சிலையின் புனிதம் இரண்டுமே கோவிலில் எந்த எந்த பொருட்கள் வருகின்றன என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

தந்திர சமுச்சியம் நூலில் குறிப்பிடப்பட்ட தூய்மைப்படுத்தும் சடங்குகள் என்பது முதலில் புனித நீர் கொண்டு கோவிலை தூய்மைப்படுத்தவேண்டும், அதன் பிறகு பூஜைகள் முடித்து பார்ப்பனர்களுக்கு சுத்த போஜனம் அளித்து அவர்களின் ஆசிர்வாதம் பெற்றதும் கோவில் புனிதம் அடைந்துவிடும், அதன் பிறகு பஞ்ச கவ்யம் எனப்படும் பசுமூத்திரம் பால் தயிர் மற்றும் சாணி கலந்த கலவையை எல்லா இடத்திலும் தெளித்த பிறகு கோவிலைத் திறக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இப்படிதான் சபரிமலையில் `தீட்டு'க்கழிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் எந்த ஒரு சடங்காக இருந்தாலும் அது பார்ப்பனர்களுக்கு நல்ல பயனை கொடுக்கும் (பொருள் சேர்க்கும்) வகையிலேயே எழுதிவைக்கப்பட்டுள்ளது.

### தமிழ் ஒளிபரப்புக்கு மூடுவிழா

அகில இந்திய வானொலியில் `பிரசார் பாரதி' (தமிழ் ஒலிபரப்பு) பொருளாதார இழப்பின் காரணமாக மூடப்போவதாக இந்திய அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், உண்மையான காரணம் பொருளாதார இழப்பா?

“தமிழ் அழிப்பு என்பது சமஸ்கிருத வளர்ச்சி” என்கிறார் பாவலரேறு பெருஞ்சித்திரனார். தமிழ் ஒலிபரப்பை ஒழித்துக்கட்டிவிட்டு இங்கு இந்தி - சமக்கிருத்த்தை பரப்புவது தான் பார்ப்பனிய மோடி அரசின் நோக்கம். அதனை வெளிப்படையாகச் சொல்ல முடியாதல்லவா. அதற்குத்தான் `பொருளாதார இழப்பு' என்று போர்வை.

தமிழகத்தின் விவசாயிகளும் கிராமப்புற ஏழை மக்களும் வானொலி மூலமாகவே அறிவியல் செய்திகளையும் விவசாய செய்திகளையும் கேட்டு பயனடைந்து வருகின்றனர். இனி அவர்கள் தவளை மொழியான சமஸ்கிருதத்தையும் அதன் கள்ளக் குழந்தையான இந்தியை மட்டுமே கேட்க வேண்டும். இல்லையென்றால் அவர்களும் `தேசத்துரோகிகள்' என முத்திரை குத்தப்படுவார்கள்.

### பட்டினி போட்டு கோமாதாவை கொல்லும் பசு பாதுகாவலர்கள்

உ.பி (ஆ)சாம யோகி ஆதித்யநாத் கோசாலைகளுக்கு 16 மாநகராட்சிகளுக்கு தலா 10 கோடி வீதம் ரூ 160 கோடி ஒதுக்கி உள்ளார். ஆனால், இந்தத் தொகையில் பசுக்களை பராமரிக்காமல் தங்கள் குடும்பங்களை பராமரித்து கொள்கிறார்கள் போலும் இம்மாநில பாஜகவினரும் அதிகாரிகளும். ஏனென்றால், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மதுரா அருகிலுள்ள கிராமத்தில் 78 க்கும் மேல் பசுக்கள் பட்டினியால் பலியாகியுள்ளன. ஒரே நாளில் 6 மாடுகள் இறந்துள்ளன. இப்பகுதியில் இருக்கம் கோசாலைக்கு மட்டும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தீவனம் வாங்கிப் போடாமல் கொன்றுள்ளனர். இங்கு மட்டுமல்ல பாஜக ஆளும் நான்கு மாநிலங்களிலும் உள்ள கோசாலைகளிலும் இதுதான் நிலைமை. மாடுகளை விற்பனை செய்வது இம்மாநிலங்களில் தடை செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் வயதான மாடுகளை என்ன செய்வது என்று தெரியாமல் சாலைகளில் விட்டுவிடுகின்றனர். தற்போது கடும் பனிக் காலமானதால் இவ்வாறு விடப்படும் பசுக்களை பள்ளிக்கூடங்களிலும் சுகாதார நிலையங்களிலும் அடைத்து வைக்க வேண்டுமென ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். தெருவில் சுற்றிக் கொண்டிருந்தால் கூட எதையாவது தின்று உயிர் பிழைத்திருக்கும். பசுவை பாதுகாக்கிறேன் பேர்வழி என்று இத்தகைய கொடுமைகளை அரங்கேற்றிவருகிறதுஉ.பி.பாஜக அரசு.

விதியை மீறி பள்ளிக்கூடங்களிலும், சுகாதார நிலையங்களிலும் பசுக்கள் அடைக்கப்படுவதை எதிர்த்து யாரும் புகார் கொடுக்க முன்வருவதில்லை. மீறி புகார் அளித்தால் அவர்களையும் பசுவின் எதிரிகள் என முத்திரை குத்தி அடித்தே கொன்று விடும் காவி பயங்கரவாத கும்பல். இத்தகைய கொலைகாரர்கள் தான் பசுபாதுகாவலர்கள் என்று வேடமணிந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

### குடியரசுத் தலைவரா? சாதித் தலைவரா?

டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஹரியானாவை சேர்ந்த கௌரவ் யாதவ் என்பவர் வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளார். குடியரசு தலைவரின் பாதுகாவலர்கள் சாதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதுதான் அதற்கான காரணம். “ஜாட், ராஜ்புத், சீக்கியர் ஆகிய மூன்று சாதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே குடியரசுத் தலைவரின் பாதுகாவலர் பணிக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். 2017 ஆம் ஆண்டு இப்பணிக்கான தேர்வில் நான் பங்கேற்றேன். அனைத்து தகுதிகள் இருந்தும் மேற்கண்ட மூன்று சாதியை சேராதவன் என்பதால் எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது” எனக் குற்றச்சாட்டியுள்ளார். இந்தியாவின் மிக `உயர்ந்த பதவி'யாக கருதப்படும் குடியரசு தலைவர் தொடர்பான பணியிலேயே இதுதான் நிலைமை என்றால் மற்ற துறைகளில் எல்லாம் கேட்கவா வேண்டும்?!!

### வரலாற்றை காட்சிப்படுத்த அனுமதி மறுக்கும் மோடி அரசு

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு நாள் விழாவில் ஒவ்வொரு மாநிலத்தின் ரதங்கள் அணிவகுத்து செல்லும். இந்த ஆண்டு கேரள மாநிலத்தின் சார்பில் `அனைவருக்கும் ஆலயம்' என்ற பெயரில் ரதம் உருவாக்கப்பட உள்ளது. இதில் வைக்கம் போராட்டம் முதற்கொண்டு இதுவரை கேரளாவில் நடைபெற்ற அனைத்து ஆலய நுழைவுப் போராட்டங்களும் காட்சிப்படுத்தப்பட உள்ளன. ஆனால், மோடி அரசு இதற்கு அனுமதி மறுத்துள்ளது. “கவுரவர்கள் டெஸ்ட் டியூப் பேபிக்கள், பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டவர்தான் வினாயகர்” என அறிவியல் மாநாட்டில் ஆபாச - புராண இதிகாச குப்பைகளை கொட்டும் இந்த `அறிவாளிகள்'தான் உண்மை வரலாற்றை - போராட்ட வரலாற்றை காட்சிப் படுத்தக் கூடாது என முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டால் பார்ப்பனியத்தின் சாதிய தீண்டாமை முகம் கிழிந்து தொங்க விடப்படும். அவர்களுக்கே அவர்கள் `ஆப்பு' வைத்துக் கொள்வார்களா என்ன? அதற்குத்தான் இந்த தடை.

### கன்னட எழுத்தாளர் கே எஸ் பகவான் மீது வழக்குப்பதிவு

அயோத்தியில் பிரச்சினைக்குரிய இடத்தில் கண்டிப்பாக ராமர் கோயில் கட்ட கூடாது என கன்னட எழுத்தாளர் கே எஸ் பகவான் எழுதியுள்ளார். தன்னுடைய `ராம மத்திர் ஏகே பேடா' எனும் நூலில் அதற்கான காரணங்களை வால்மீகி ராமாயணத்தில் இருந்தே ஆதாரங்களைக் கொண்டு விளக்கியுள்ளார். இதற்காக - விசுவ இந்து பரிசத்(வி.எச்.பி) அமைப்பால் புகார் அளிக்கப்பட்டு - இவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்து மதத்தின் பெயரால் மக்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு கீழ் வைக்கப்பட்டுள்ளதை பல்வேறு தளங்களிலிருந்து அம்பலப்படுத்திய கௌரி லங்கேஷ், பேராசிரியர் எம்.எம்.கல்புர்கி, கோவிந் பன்சாரே ஆகியோர் சனாதன சாஸ்தா என்ற அமைப்பால் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் வரிசையில் கன்னட எழுத்தாளர் கே.எஸ். பகவானையும் கொலை செய்ய திட்டமிட்டுள்ளது இவ்வமைப்பு. இந்தப் பார்ப்பன பயங்கரவாதிகளின் கொலைப் பட்டியலில் கே.எஸ். பகவானும் உள்ளார் என்பதே இதற்கு சான்று. 2015ஆம் ஆண்டில் பேராசிரியர் கல்புர்கி சுட்டுக் கொல்லப்பட்ட போதே இவருக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. அதையும் மீறி தொடர்ந்து பார்ப்பனியத்தை தோலுரிக்கும் பணியை செய்து வருகிறார் கே.எஸ். பகவான்.

### அஞ்சி நடுங்கும் ’52 இன்ச்’ மார்பு

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கார்ப்பரேட் நிறுவனங்களும், காவி கூட்டங்களும் மோடியை மக்களை மீட்க வந்த `தேவதூதனை' போல பல கோடிகளை கொட்டி விளம்பரம் செய்தது. `ஊழலற்றவர்', `நேர்மையானவர்', `திறமையானவர்' என பல போலி பிம்பங்களுடன் ஆட்சிக் கட்டிலில் ஏறிய மோடி பாசிச கோமாளியாக மக்களை வாட்டி வதைத்தார். விளைவு இப்போது மக்கள் மோடியை சாத்தானை போல விரட்டியடிக்கிறார்கள். அவர் போகுமிடமெல்லாம் மக்களிடம் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. `மோடியே திரும்பி போ!' என்ற முழக்கமும், கறுப்புக்கொடி காட்டுவதும் வாடிக்கையாகிவிட்டது. இதனால் மோடியின் கூட்டங்களுக்கு வரும் தொண்டர்கள், பொதுமக்கள் மீது கருப்பு வண்ணத்தில் உடை அணிந்து வரக்கூடாது, கைகுட்டைகள் கூட கருப்பு வண்ணத்தில் இருக்கக்கூடாது என பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி 5ஆம் தேதி ஜார்க்கண்ட் மாநிலத்தில் மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது கருப்பு கால் சட்டை(பேன்ட்), சட்டை, கோட், குளிராடை, காலணி, சாக்ஸ், கைப்பை, குடை என கருப்புக்கு முழுவதும் தடை போட்டது அம்மாநில காவல்துறை. என்னதான் தடை போட்டாலும் மக்களின் கோபக் கனலில் இருந்து மோடியும் அவரது கூட்டாளிகளும் தப்பிவிட முடியாது.

●

# இந்திய அரசியலமைப்பின் இந்து மதச் சார்பு

(ப்ரீத்தம் சிங் ஆக்ஸ்போர்ட் ப்ருக்ஸ் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்துறைப் பேராசிரியராக உள்ளார். இவர் கூட்டாட்சி, தேசியவாதம் மற்றும் வளர்ச்சி, இந்தியாவில் நிறுவனமாக்கப்பட்ட மதவாதம் போன்ற குறிப்பிடத்தக்க புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவர் எழுதி "Hindu Bias in India's Secular Constitution" என்ற பெயரில் வெளியான தொகுப்பின் மொழியாக்கமே இக்கட்டுரைத் தொடராகும்).

இந்திரா காந்தியின் அவசரநிலைக் காலத்தில் கொண்டுவரப்பட்ட 42வது சட்டதிருத்தம்தான் (1976) அதிகாரப்பூர்வமாக இந்தியக் குடியரசை மதச்சார்பற்ற மற்றும் சோசலிசக் குடியரசு என்று வரையறுத்தது. எனினும், 1950களில் இருந்தே, அதாவது அரசியலமைப்புச் சட்டம் செயல்படத்துவங்கிய காலம் தொட்டே பெரும்பாலான அரசியல் கருத்தாளர்களின் பார்வை, இந்திய அரசியலமைப்பு மதச்சார்பற்ற ஒன்று என்பதாகவே இருக்கின்றது. மதச்சார்பின்மை ஒரு கொள்கையாகவும் கருத்தாக்கமாகவும் பல பகுதிகளில் பலவாறு வழங்கப்படுகின்றது. எனினும், ஒரு மதச்சார்பற்ற அரசானது குறைந்தபட்சம் அச்சமூகத்தில் வாழும் அனைத்து மதப்பிரிவினரையும் சமதளத்தில் வைத்தே அணுக வேண்டும் என்பதை நாம் அடிப்படையாகக் கொள்ளலாம். மேலும் எண்ணிக்கையில் பின்தங்கியுள்ள மதச்சிறுபான்மையினருக்கு உரிய பாதுகாப்பளிப்பதும் ஒரு மதச்சார்பற்ற அரசியலமைப்பின் கடமையாகும்.

1980களில் இருந்து அசுர வளர்ச்சி கண்டு வரும் இந்துத்துவ சக்திகளின் `இந்து-இந்தியா `கனவைத் தகர்ப்பதற்கு, இந்திய அரசியலமைப்பு ஒரு மதச்சார்பற்ற அரசியலமைப்பு என்ற பிரச்சாரத்தை, ஒரு கருத்தியல் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சில முற்போக்காளர்களும் மதச்சார்பற்ற அரசியல் தலைவர்களும் நம்பிவருகின்றனர். அவர்கள் குறிப்பிடுவது போல் அரசியலமைப்பில் சில முற்போக்கான அம்சங்கள் இருப்பினும், இந்துமதச் சார்புடைய எண்ணற்ற பிற்போக்கான கூறுகள் பரவிக்கிடக்கின்றன. இந்திய சுதந்திரத்திற்கான தேசிய இயக்கத்தில் இருந்த இந்து மத ஆதிக்க சக்திகள் மற்றும் காந்தி உட்பட பல்வேறு தலைவர்களின் சித்தாந்தப் பார்வையின் தொடர்ச்சியே அரசமைப்புச் சட்டத்திலும் தீவிர இந்து மதக் கண்ணோட்டம் விரவிக்கிடக்கக் காரணம் என்பதை மறுக்க முடியாது. தற்போது இந்துத்துவ சக்திகள் வளர்ச்சியடைவதை, அந்தச் சார்புநிலையின் நீட்சியாகத்தான் காண வேண்டுமே தவிர, அரசமைப்பு சட்டத்துக்கு முரணான வளர்ச்சியாகக் கருத முடியாது. இவ்வாறு அரசியலமைப்பு சட்டம் அனுமதிக்கும் , அதில் காணப்படும் இந்துமதக்கூறுகளை ஒவ்வொரு விதி/ ஷரத்து(article) வாரியாகக் காணலாம்.

விதி 1 : ஒன்றியத்தின் பெயரும் அதன் எல்லைகளும். (1) இந்தியா, அதாவது பாரதம் என்பது, மாநிலங்கள் இணைந்த ஒன்றியமாக இருக்கும்.

இந்தியாவை பாரதம் என்று பெயரிட்டதிலேயே அரசமைப்புச் சபையில் இருந்த இந்துத்துவ சித்தாந்தவாதிகளின் ஆதிக்கம் தெரிகின்றது. இந்தியத் துணைக்கண்டம் முழுமையும் பரத மன்னனால் ஆளப்பட்ட பாரத் வர்ஷம் என்ற பெயருடைய நிலப்பரப்பாக இருந்ததாக இந்து இலக்கியங்கள் கூறுகின்றன. எனவே பாரதம் என்று குறிப்பதன் மூலம் ஆங்கிலேய ஆட்சிக்கும் இஸ்லாமிய ஆட்சிக்கும் முந்தைய ஒரு பொன்னான இந்து சாம்ராஜ்யம் இருந்ததாக உணர்த்த முயல்கின்றனர். இது மேம்போக்கான மிதவாத இந்துத்துவப் போக்காகத் தோன்றினாலும், இந்து அல்லாதவர்களின் மீது இது ஏற்படுத்தும் தனிமைப்படுத்தும் விளைவு நிச்சயம் ஆபத்தானது. (ஆகஸ்டு 1949இல் ஓர் இந்து பெண் துறவி இரண்டு கோரிக்கைகளை வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக மிரட்டினார். (i) இந்தியை தேசிய மொழியாக அறிவித்தல், (ii) இந்தியாவை பாரதம் என்று பெயர் மாற்றுதல். நேருவும் மற்றும் சிலரும் அவரை சந்தித்து வாக்குறுதி அளித்த பின்னரே அப்போராட்டத்தைக் கைவிட்டதாகக் கூறப்படுகிறது).

அரசியலமைப்பின் வேறு எந்தப் பகுதியிலும் பாரதம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. ஆகவே அதனை முதல் ஷரத்திலேயே புகுத்தி வைத்திருப்பது ஒரு மிக முக்கிய அடையாளமாகப் படுகின்றது. அந்த அடையாளம் இந்துக்களுக்கு புதிய இந்தியாவின் மீது இருக்கும் உரிமையைக் குறிப்பால் உணர்த்துவதே ஆகும். அரசியலமைப்புச் சபையில் பீகாரில் இருந்து வந்த லால் நரேன் பாரதம் என்ற வார்த்தை இந்தியாவிற்கு முன்னதாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று பேசுகிறார். பல நூறு ஆண்டுகள் அந்நிய ஆட்சியில் இருந்து தன்னாட்சியை அடைந்ததாகக் கருதப்பட்ட இந்தியாவிற்கு, பாரதம் என்று பெயரிட்டதன் மூலம் இந்துக்கள் அந்த அரசோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள உதவியது.

கூட்டாட்சி என்ற வார்த்தைக்கு பதிலாக ஒன்றியம் என்று பயன்படுத்தப்பட்டிருப்பதும் ஒரு நோக்கத்துடனேயே நடந்தேறியுள்ளது. ஒன்றியம் என்ற வார்த்தையின் பயன்பாட்டினை நாம் புரிந்து கொண்டால் அதனோடு இணைந்துள்ள இந்துத்துவ நோக்கங்களையும் நாம் விளங்கிக் கொள்ளலாம். இந்திய சுதந்திரத்திற்கு மற்றும் பிரிவினைக்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது, 1946 இல் பிரிட்டிஷ் அமைச்சர்களின் தூதுக்குழு (Cabinet Mission) சுதந்திர இந்தியாவின் வடிவத்தைப் பற்றி தங்கள் பார்வையை முன்வைத்திருந்தனர். பலம் குறைந்த மையத்தையும் ,அரசமைப்பில் குறிப்பிடப்படாத அதிகாரங்களை தங்களிடத்தே கொண்ட பலம்வாய்ந்த மாநிலங்களையும் கொண்ட ஒரு கூட்டாட்சி அரசாகவும் இருக்க வேண்டும் என்று அக்குழு கருதியது. மைய அரசு பலமாக இருப்பின் இந்து ஆதிக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்று முஸ்லிம் லீக் கருதியது. எனவே, அதற்கு தீர்வாகவே அமைச்சர்களின் தூதுக்குழு இவ்வகையான கூட்டாட்சி அமைப்பை நிறுவ எண்ணியது. ஆயினும் கூட்டாட்சி அமைப்பு அமையவில்லை என்பதை நாம் அறிவோம்.இத்திட்டம் நிறைவேறாமல் போக பல்வேறு காரணங்கள் உண்டு. மிக முக்கியமாக, கூட்டாட்சி முறைக்கு காங்கிரஸின் எதிர்ப்பு. இதன் தொடர்ச்சியே பாகிஸ்தான் பிரிவினைக்கு வழிவகுத்தது. பெரும்பாலான இந்திய வரலாற்றாளர்கள் பிரிவினைக்கு ஜின்னாவையும் முஸ்லிம் லீகையும் காரணம்கூறி காங்கிரஸின் பங்கை மறைக்கின்றனர்.

பிரிவினைக்குப் பின்னர் ,இந்திய அரசியல் தலைமைகள் தங்கள் திட்டமான பலமான மையத்தை அமைப்பதற்கு இருந்த தடை நீங்கியதாக எண்ணி நிம்மதி அடைந்தனர். 1947 இல் கே எம் பணிக்கர் எழுதியதாவது இஸ்லாமிய பெரும்பான்மை கொண்ட மாகாணங்களை அகில இந்தியத் தலைமையின் கீழ் வைத்திருப்பது என்பது `பலவீனமான மையத்தை கொண்ட கூட்டாட்சி அரசு' என்ற தவிர்க்கமுடியாத தீங்கையே விளைவித்திருக்கும். அவர்கள் பிரிந்து சென்றபின் மற்ற மாகாணங்களுக்கும் அதுபோன்ற அதிகாரத்தைக் கொடுப்பது அவசியமற்றதாகிறது. பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுப்பதன் மூலம் இஸ்லாமியர்களின் பேரம் பேசும் அதிகாரம் முற்றுப் பெற்று விடுவதால், தங்களுடைய நோக்கமான பலம்வாய்ந்த மைய அரசை அமைப்பதற்கு இருந்த தடையும் நீங்கியதாகவே அரசியலமைப்புச் சபையில் இருந்த பலர் கருதினர். நேருவின் பார்வையும் இவ்வாறாகவே இருந்தது. அரசியலமைப்பு சபையிலிருந்த வேறுசிலர் பலமான மையம் அமைப்பதற்கு இந்துத்துவ பார்வையிலான வரலாற்றைக் காட்டி நியாயப்படுத்தினர். எப்போதெல்லாம் இந்நாட்டில் பலமான மையம் இல்லையோ அப்போதெல்லாம் அந்நியர்களிடம் அடிமைப் படுகிறோம். அரசமைப்பின் இரண்டு முக்கியமான விஷயங்கள் ,நாட்டின் ஒற்றுமையும் பலமான மத்திய அரசாங்கமும் ஆகும். அவற்றை கேள்வி கேட்போர் அந்நிய அரசாங்கத்தின் கைக்கூலிகளாகவே இருப்பார்கள் என்று ஜஸ்பத் ராய் கபூர் கூறுகிறார்.

இவர்கள் அல்லாமல் அம்பேத்கர் உட்பட வேறு பலரும் மையப்படுத்தலை ஆதரித்தனர்.இந்து தேசியவாதிகள் ,மதசார்பற்ற இந்திய தேசியவாதிகள் (நேரு) மற்றும் அம்பேத்கர் இம்மூவரும் வேறு வேறு காரணங்களுக்காக பலமான மைய அரசு வேண்டுமென்ற கருத்தில் ஒன்றிணைந்தனர். அம்பேத்கர் மையப்படுத்தலை ஆதரித்தாலும், நேருவின் தீவிர மையப்படுத்தும் அரசியலை எதிர்ப்பதிலும் முதலாக நின்றார். எடுத்துக்காட்டாக, அரசியலமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை போதும் என்ற நேருவின் பார்வையை எதிர்த்தார். மேலும் முன்மொழியப்பட்ட அரசமைப்பு சட்டத்தில் இருக்கும் மையப்படுத்தும் கூறுகள் ,மாகாணங்களின் தன்னாட்சியில் வரம்பு மீறி ஆதிக்கம் செலுத்துவதையும் ஒப்புக்கொண்டார்.

மையப்படுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் தென்மாநிலங்கள் முதன்மையாக நின்றன. என்.ஜி. ரங்கா, கே. சந்தானம், மகபூப் அலி பைக் மற்றும் ராமலிங்கம் செட்டியார் ஆகியோர் மையப்படுத்தலை தீவிரமாக எதிர்த்தனர். மகபூப் அலி ஒன்றிய அரசியலமைப்பில் மத்திய அரசாங்கம் விரும்பினால் சர்வ அதிகாரங்களையும் எடுத்துக்கொள்ள இந்த வரைவு அரசியலமைப்பு சட்டம் இடம் கொடுக்கிறது என்று கூறுகிறார். டிடி கிருஷ்ணமாச்சாரி, 'பலமான மையம் என்பது மைய அரசின் மொழியைப் பேசாத மக்களை அடிமை நிலைக்கு இட்டுச் செல்லுமோ' என்ற அச்சம் இருப்பதாக கூறுகிறார். மையப்படுத்தலின் விளைவாக இந்தி ஏகாதிபத்தியமும் சர்வாதிகார அரசும் அமைந்து விடுமோ என்றும் அச்சப் படுவதாக குறிப்பிடுகிறார்.

ஹெச்.வி.காமத் குறிப்பிடுகையில் குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற வழிமுறை ஜனநாயகத்திற்கு இருக்கும் ஆபத்து. அது வருங்காலங்களில் ஹிட்லரை போன்ற சர்வாதிகார நடைமுறைக்கே இட்டுச் செல்லும் என்றும் குறிப்பிடுகிறார்.

சீக்கியர்களின் எதிர்ப்பை பார்க்கையில், ஜஸ்டிஸ் அஜித் சிங் அரசியலமைப்பு சபையில் இருந்த சீக்கிய பிரதிநிதி, மாநிலங்களுக்கு தன்னாட்சி வழங்கவில்லை என்ற காரணத்திற்காக இந்திய அரசியலமைப்பில் கையெழுத்திடவில்லை என்ற ஒரு வரலாற்று உண்மையை மேற்கோள் காட்டுகிறார் .

ஹுக்கம் சிங் கூறுகையில் இந்திய அரசியலமைப்பின் மீது சீக்கியர்களுக்கு பெரும் விரக்தி ஏற்படுகிறது. அரசியலமைப்பிலுள்ள ஒவ்வொரு ஷரத்தும் மாநில அரசுகளின் தன்னாட்சி அதிகாரத்தை பறிக்கும் விதமாக இருக்கின்றன. மேலும் சிறுபான்மையினர், குறிப்பாக சீக்கியர்கள் முழுவதுமாக நிராகரிக்கப் பட்டுள்ளனர். மாநில அலகுகள் சாதாரண நகராட்சி மன்றங்களைப்போல பாவிக்கப்பட்டுள்ளன. இவை எல்லாம் சேர்ந்து ஒரு பாசிச அரசு அமையவே வழிவகுக்கும் என்கிறார். 1947லிருந்து, குறிப்பாக 1980களில் மற்றும் 1990களில் பஞ்சாபில் ஏற்பட்ட கலவரங்களுக்கு காரணம், மையத்தை பலமாக வைத்திருக்கும் இந்த ஒன்றிய அரசியல் அமைப்பே ஆகும் என்று பெய்ன்ஸ் குறிப்பிடுகிறார்.

1947க்கு முன்னரும் பின்னரும் இந்துத்துவ சக்திகளே தீவிர மையப்படுத்தலுக்கும், ஒன்றிய அரசின் சர்வாதிகாரத்திற்கும் குரல் கொடுத்து வருகின்றனர். வேறு பலரும் மையப்படுத்தலை ஆதரித்து இருந்தாலும், பலமான மையம் கொண்ட இந்திய அரசியலமைப்பு என்பது இந்துத்துவ சக்திகளின் நோக்கமான `இந்து-இந்தியா' தேசிய வாதத்தையே முன்வைக்கிறது.

*[ தொடரும்... ]*

## புத்தகத்திற்குத் தடை

`யோக மாஸ்டர்' பாபா ராம்தேவை அம்பலப்படுத்தி `சாமியாரிலிருந்து பெரிய தொழிலதிபர் வரை' (From Godman to tycoon) என்ற பதக் நாராயண் என்பவர் எழுதிய நூலை டெல்லி உயர்நீதிமன்றம் வெளியிடவும், விற்கவும் தடை விதித்துள்ளது.

மிதிவண்டியில் கிராமம் கிராமமாக சென்று யோகா பயிற்சி அளித்து வாழ்க்கை நடத்திவந்த ராம் தேவ் இன்று ஒரு பெரிய தீவையே விலைக்கு வாங்கும் அளவுக்கு எப்படி வளர்ந்தார்? கார்பரேட் முதலாளியாக உருவெடுத்தார்? என்பது பற்றி விவரங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளதால் இதனை அறிந்துக் கொண்ட ராம்தேவ் நீதிமன்றத்தை நாடி இத்தடையை பெற்றுள்ளார்.

புத்தகத்திற்கு தடை விதிப்பதின் மூலம் மோடியின் கூட்டாளியான ராம்தேவ்வின் திருட்டுத்தனங்களை மூடி மறைத்துவிட முடியுமா என்ன?

## கஜா புயல் நிவாரணப் பணிகள் - புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழ்நாடு.

கஜா பேரழிவு புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டு தங்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தையும் இழந்து தவிக்கும் காவிரி டெல்டா மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர்கள் ஈடுபட்டனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், கோவை, திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, ஆகிய 23 மாவட்டங்களில் நிவாரண நிதியும், நிவாரணப் பொருட்களும் திரட்டப்பட்டன.

18-11-2018 முதல் 29-11-2018 வரை 12 நாட்களுக்கு நிதி, பொருள் சேகரிப்புப் பணி நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான தோழர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

விநியோகிக்கப்பட்ட பொருட்கள்










அரசி, பருப்பு, உப்பு, பூண்டு, நல்லெண்ணெய், கடலெண்ணய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், தீப்பெட்டி, மெழுகுவர்த்தி, பிஸ்கெட், பால் பொருட்கள், மருந்துகள், தின்பண்டம், உடைகள், நாப்கின், தார்பாலின், சோலார் விளக்கு, போர்வை, துண்டு, பாய், கொசுவலை, கொசுவர்த்தி.

வினியோகிக்கப்பட்ட பகுதிகள்: தமிழகம் முழுவதும் 23 மாவட்டங்களில் திரட்டப்பட்ட மேற் கண்ட நிவாரணப் பொருட்கள்,

நாகை மாவட்டம்
வேதாரண்யம் ஒன்றியம் :
தகட்டூர், தெற்குத்தகட்டூர், ஆரியங்காடு, அதியன்காடு, கல்யாண்சேரி
மருதூர் ஒன்றியம் :
ராஜாபுரம் வடக்கு, ராஜாபுரம் தெற்கு
ஆயக்காரன்புலம் ஒன்றியம் :
சேத்தி 1, 2, 3, 4
பழையகரம் எட்டாம் வார்டு
கத்தரிப்புலம் ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வீடு வாரியாக வினியோகம் செய்யப்பட்டன.

மேலும், வீடுகளை இழந்த மக்களுக்கு தார்பாயைக் கொண்டு கூரைகள் அமைத்துக் கொடுக்கும் பணியும் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க நிவாரணப் பொருட்களையும், நிதியையும் வாரி வழங்கிய மக்களுக்கும் உதவிய சனநாயக, முன்னணி ஆற்றல்களுக்கும் நன்றி!!

*செய்தி:*
*புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழ்நாடு.*

## பிரான்சை உலுக்கி எடுக்கும் மஞ்சள் அங்கிப் போராட்டம்

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பிரான்ஸ் நாட்டில் நடைபெற்றுவரும் மஞ்சளங்கிப் போராட்டம் சர்வதேச அளவில் கவனத்தைப் பெற்றுள்ளது. அதன் எதிரொலியாக பல்வேறு நாடுகளில் அதற்கு ஆதரவாக போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. இதனால் ஏகாதிபத்தியங்கள் கலங்கிப்போய் உள்ளன. இப்போராட்டச் செய்திகளை வெளி உலகிற்கு செல்லாமல் தடுப்பதற்காக பிரான்ஸ் அரசு ஈபிள் கோபுரம் உட்பட பல்வேறு வகையான சுற்றுலாத் தலங்களை உடனடியாக மூடியது. தமிழ் ஊடகங்களும் இச்செய்திகளை இருட்டடிப்பு செய்து வருகின்றன.

ஏன் இந்தப் போராட்டம்?

உலகமயமாக்கல் கால கட்டத்திற்கு பின்பு பிரான்சில் சமூகச் சூழல் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது. தொடர்ச்சியாக பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயுவின் விலை ஏற்றம் காரணமாக பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்தது. கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்களின் பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் விலையை பன்மடங்கு கூடியது. இதனால் மக்களின் வாழ்வாதார நிதி(cost of Living) மிகவும் அதிகமானது. இது ஒருபுறம் என்றால் மற்றொருபுறம் மலிவான உழைப்பு சக்திக்காக ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து பெருமளவில் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இந்நிகழ்வால் பிரான்ஸ் நாட்டின் வேலைவாய்ப்பின்மை(2018 ஆம் ஆண்டு நிலவரப்படி) ஒன்பது சதவீதமாக உயர்ந்தது. மேலும் பிரான்ஸ் அரசு பல்வேறு வகையான சமூக நலத்திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதியைப் பெருமளவு குறைத்தது.

இது போதாதென்று பிரான்ஸ் அரசு எரிபொருள் வரி, கார்பன் வரி என்று பல்வேறு வகையான வரிகளை மக்கள் மீது சுமத்தியது. இது ஒருபுறம் என்றால் மறுபுறம் கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு பல கோடி மில்லியன் யூரோ அளவிற்கு மானியம், வரிச்சலுகை மற்றும் கடன் தள்ளுபடி என்று அனைத்து வகையான சேவைகளையும் செய்தது பிரான்ஸ் அரசு. இதனால் பல லட்சக்கணக்கான ஏழை மற்றும் நடுத்தர மக்கள் தெருவிற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் தான் ஏற்றத்திற்கு எதிரான ஒரு புகார் மனுவை இணையத்தில் பதிவேற்றம் செய்தார். பதிவேற்றம் செய்த உடனே கிட்டத்தட்ட மூன்று லட்சம் மக்கள் இதற்கு ஆதரவளித்தனர். அதன்பின் இக்கருத்து மக்களிடையே காட்டுத் தீ போல் பரவியது. அதன் தொடர்ச்சியாக நவம்பர் மாதம் 14ஆம் தேதியன்று ஒரு சிறிய போராட்டம் நடத்துவது என சமூக வலைத்தளங்களில் அழைப்பு விடுக்கப்பட்டது . அதன்பின்னர் நவம்பர் 17 தொடங்கிய இப்போராட்டம், விலையேற்றத்தை திரும்பப் பெற்ற பின்பும் ஓய்ந்தபாடில்லை. இதுவரையில்



*பாரிஸ் நகர வீதிகளில் போராடும் மஞ்சளங்கி போராட்டக்காரர்கள்*

கடந்த மே மாதம் பிரிச்சிலா என்ற பெண்மணி, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரான் தலைமையிலான அரசு கொண்டுவந்த எரிபொருள் விலை

எந்த போராட்டங்களிலுமே கலந்து கொள்ளாத பல்லாயிரக்கணக்கான ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் வீதியில் இறங்கி போராடிக் கொண்டுள்ளனர். ஐந்து பேர் போராட்டக் களத்தில் இறந்த பின்பும் கூட போராட்டத்தின் வீரியம் சிறிதளவும் குறைந்தபாடில்லை.

இமானுவேல் மக்ரான் அரசின் முன்பு போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள்.

1. வீடற்றவர்கள் இல்லாத நிலைமையை உருவாக்க வேண்டும்.

2. அனைவருக்கும் நிரந்தர வேலை வேண்டும்.

3. அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வு ஊதியம் 1200 யூரோ கொடுக்க வேண்டும்

4. எரிபொருள் விலை உயர்வை நிறுத்த வேண்டும்.

5. குறைந்தபட்ச ஊதியம் 1200 யூரோ அளவுக்கு நிர்ணயம் செய்ய வேண்டும்

6. இமானுவேல் மக்ரான் உடனடியாக பதவி விலக வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை பிரான்ஸ் அரசு செவிசாய்க்காமல் போராட்டக்காரர்களை மிகக்கடுமையாக ஒடுக்கி வருகிறது. செயற்கையாக வன்முறையைத் தூண்டுவது, குண்டு வெடிப்புகளை ஏற்படுத்துவது போன்ற காரியங்களைச் செய்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர நினைக்கிறது .

பிரான்சில் நடக்கும் போராட்டத்தைப் போலவே வடக்கு ஆப்பிரிக்க நாடான துனிசியாவிலும் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. உலகமயமாக்கல் காலகட்டத்தில் பல்வேறு நாடுகளை ஈவிரக்கமற்ற வகையில் சுரண்டி வருகிறது ஏகாதிபத்தியங்கள். மனித குலத்தை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் இத்தகைய ஏகாதிபத்தியங்களுக்கு முடிவு கட்டும் நாள் வெகு தொலைவில் இல்லை. ●

**கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமந் தரும் (குறள்: 663)**

***பொருள்:* செய்து முடிக்கும் வரையில் ஒரு செயலைப்பற்றி வெளிப்படுத்தாமலிருப்பதே செயலாற்றும் உறுதி எனப்படும். இடையில் வெளியே தெரிந்துவிட்டால் அச்செயலை நிறைவேற்ற முடியாத அளவுக்கு இடையூறு ஏற்படக்கூடும்.**

**அறிவிக்கை:**

**சென்ற இதழில் வெளிவந்த பருவ நிலை மாற்றமும் அடிமைத் தமிழகமும் - பகுதி 2 இன் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்.**

முகவரி: 206, 3 ஆம் தளம், பாலாஜி வளாகம், கோபாலபுரம் முதல் தெரு, கோயமுத்தூர்-641018 முகநூல்: https://www.facebook.com/sen thooval